Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை 30 | செய்தி: 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :207 ஆனி 09ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 23 ஜூன் 2020 வள்ளுவர் ஆண்டு 2051



முச்சந்தி முரளி

"இல்லாத பொல்
லாததெல்லாம்
கண்டுபிடிக்கிற உந்த
விமல் வீரவன்ச போன
பிறப்பில வில்லேஜ்
விஞ்ஞானியா இருந்தி
ருப்பாரோ?..... !"

# ஐ.நாவின் பிடிக்குள் இலங்கை

*இராணுவமயப்படுத்தலின் விளைவு என சந்திரிகா, மங்கள விசனம்*

கொழும்பு, ஜூன் 23

தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடக்கு, கிழக்கில் இராணுவமயப்படுத்தலால் ஐ.நாவின் பார்வைக்குள் இலங்கை சிக்குண்டுள்ளது. அதை உறுதிப்படுத்தும் வகையில் ஐ.நா. விசேட அறிக்கையாளரின் வருடாந்த அறிக்கை அமைந்துள்ளது. 15



## வனவளத் திணைக்களத்துக்கு எதிராக மக்கள் போராட்டம்!

வவுனியா, ஜூன் 23

வனவளத் திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட காஞ்சூரமோட்டை மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர். காஞ்சூரமோட்டைப் 15

## நயினாதீவு விவகாரம்; விசாரணைக்கு பணிப்பு

கொழும்பு, ஜூன் 23

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய உற்சவத்தில் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்ட பாதுகாப்புத் தரப்பினர் காலணிகளுடன் ஆலயத்துக்குள் சென்றமை தொடர்பாக உடன் விசாரணை 15

## ரயில் முன் பாய்ந்து குடும்பஸ்தர் சாவு!

வவுனியா, ஜூன் 23

ரயிலுடன் மோதி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் வவுனியா பெரியகட்டு 41 ஆவது மைல் கல்லுக்கு அண்மையில் நேற்றுத் 15

## நயினாதீவு செல்வதற்கு பாஸ்; ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 23

நயினாதீவுக்குச் செல்வதற்கு நடைமுறைப்படுத்தப்படும் "பாஸ்" நடைமுறைக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தில் நேற்று இரு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நயினை நாகபூசணி அம்மன் ஆலய வரு 15

## கருணாவிடம் இன்று சி.ஐ.டி. விசாரணை!

கொழும்பு, ஜூன் 23

முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனிடம் (கருணா) குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இன்று செவ்வாய்க்கிழமை விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் வெளியிட்டுள்ள சர்ச்சைக்குரிய கருத்துத் 15

## வாள்வெட்டில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

இருபாலை, மடத்தடிப் பகுதியில் நேற்று மாலை நடந்த வாள்வெட்டுச் சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மடத்தடிப் பகுதியில் 15

## வெடிமருந்து திருடியோர் பொலிஸாரின் பிடியில்!

யாழ்ப்பாணம், ஜூன் 23

கண்ணிவெடி அகற்றும் தொண்டு நிறுவனத்தின் பட்டறையிலிருந்து வெடிமருந்தைக் கடத்த முயன்றனர் என்ற குற்றச்சாட்டில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று 14

## வழங்கிய வாக்குறுதியை காற்றில் பறக்கவிட்ட இலங்கை

ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 23

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது தொடர்பான வாக்குறுதியில் இருந்து இலங்கை விலகிச் சென்றுள்ளது என்று தெரிவித்துள்ள ஐரோப்பிய ஒன்றியம் ஜ.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை இந்த வாக்குறுதியை வழங்கியி 15

## இரு நாள்களின் பின்னர் ஒருவருக்கு கொரோனா

கொழும்பு, ஜூன் 23

இலங்கையில் இரண்டு நாள்களின் பின்னர் நேற்று ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார். இதேவேளை மேலும் 28 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர்.

தேசிய தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவினால் நேற்று எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் படி, கொரோனா வைரஸ் தொற்றியுள்ளதாக அடையாளம் காணப்பட்டவர் 15

## இணக்க அரசியலை ஒருபோதும் ஏற்கேன்!

*ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா விளக்கம்*

யாழ்ப்பாணம், ஜூன் 23

தமிழ் மக்களது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இணக்க அரசியலில் பிரவேசிப்பது அவசியம் என்று நான் தெரிவித்ததாக விசமனத்தன மாகச் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. எந்தச் சந்தர்ப்பத்திலும் நான் அவ்வாறான கருத்தை வெளிப்ப 14

## ஆபத்தானதாக மாறுகிறதாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

*விமல் வீரவன்ஸவின் கண்டுபிடிப்பு*

கொழும்பு, ஜூன் 23

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு, கிழக்கில் தற்போது ஆபத்தான கட்சியாக மாறி வருகின்றது. முன்னாள் புலி உறுப்பினர்களைக் கொண்ட கட்சியான ஜனநாயகப் போராளிகள் கட்சி கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்க முன்வந்துள் ளமை தொடர்பில் நாம் மிகவும் அவதானத்துடன் விழிப்புடனும் இருக்க வேண்டும். 15

## போதைப்பொருள் வியாபாரிகளே ஈஸ்டர் தாக்குதலுக்குக் காரணம்!

மைத்திரி பரபரப்புத் தகவல்

கொழும்பு, ஜூன் 23

இலங்கையில் நடைபெற்ற உயிர்த்த ஞாயிறுத் தற்கொலை குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் சர்வதேச போதைப்பொருள் வியாபாரிகளே செயற்பட்டுள்ளனர் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் 15

அவசர பணத்தேவைகளுக்கு செலான் வங்கியில் தங்கத் தீர்வு
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ 57,000/-
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
011 200 88 88
செலான் வங்கி

# பேரினவாத சக்திகளின் வெற்றியை தமிழ் மக்கள் தகர்த்தல் வேண்டும்

## தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலர் துரைராஜசிங்கம் இப்படித் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 23**

**அரசு சார்ந்த தேசிய கட்சிகளாகத் தங்களை அடையாளம் காட்டிக் கொள்பவர்களும், தேசியக் கட்சிகளைத் தங்களுக்குப் பின்னணியாக வைத்திருப்பவர்களும் பெருந்தேசியவாதத்திற்குத் துணைபோகின்றவர்களாகத்தான் இருக்கின்றார்கள் என்பதை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். சிங்களப் பெருந்தேசியவாதக் கட்சிகளினுடைய முகமூடிகள் வெற்றி பெறாத வகையிலே தடுக்க வேண்டியது தமிழ் மக்களின் கடமை என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளருமாகிய கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.**



மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன்னுடைய கொள்கை அடிப்படையிலே இரண்டு முக்கிய விடயங்களை முன்நிறுத்தி இந்தத் தேர்தலில் ஈடுபடுகின்றது. ஒன்று, தமிழ் மக்களுக்கு நிறைவான அதிகாரத்தை வழங்கக் கூடியதான புதிய சட்டத்தினை உருவாக்குவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது. மற்றையது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் அடிப்படையில் நிலையான, நீடித்த அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பது. இந்த அடிப்படையிலேயே எங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட இருக்கின்றோம்.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் ஏற்பட்ட நிகழ்வுகள் இந்த நாட்டினை முழுமையான ஒரு தேசியமாக அடையாளம் காட்டவில்லை. பெருந்தேசியவாதம் என்ற உருவாக்கத்தின் அடிப்படையில் தமிழ்த் தேசியவாதம் என்ற ஒன்று உருவாக்கப்படும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அந்த வகையில் நாங்கள் தமிழ்த் தேசியத்தை முன்நிறுத்தியவர்களாக இருக்கின்றோம்.

பிரிக்கப்படாத, பிளவுபடாத நாட்டுக்குள்ளே பிராந்தியத்திற்கு அதிகாரங்கள் வலியுறுத்தப்பட்ட திரும்பப் பெறாத வகையிலான அதிகாரங்களைக் கொண்டதான ஓர் அரசமைப்பை உருவாக்குவதற்கான பல்வேறு முயற்சிகளை நாங் கள் முன்னைய ஆட்சிக் காலங்களில் எடுத்திருக்கின்றோம். கடந்த ஆட்சிக் காலத்தில் அரசமைப்பு வரைவு வரைக்கும் கொண்டு சென்றோம். தற்போது நாடாளுமன்றம் அமைப்பதைத் தொடர்ந்து அது தொடர்பாக எங்களுடைய முயற்சிகளைத் தொடருவோம்.

இன்றைய தேர்தல் களத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிகமாக விமர்சிக்கப்படுகின்றது. விநோதம் என்னவென்றால் எங்களை விமர்சிக்கின்ற அனைத்துக் கட்சிகளும் தங்கள் கட்சியின் நிலைப்பாடுகள், கொள்கைகள் பற்றி பகிரங்கப்படுத்தாமல் எங்களுடய நடவடிக்ககளை விமர்சிப்பதை மட்டுமே தங்கள் கொள்கைகளாகக் கொண்டிருக்கின்றன. மட்டக்களப்பிலும் சரி வடக்குக் கிழக்கிலும் சரி போட்டியிடுகின்ற அரசு சார்ந்த தேசிய கட்சிகளாகத் தங்களை அடையாளம் காட்டிக் கொள்பவர்கள் அல்லது தேசியக் கட்சிகளைத் தங்களுக்குப் பின்னணியாக வைத்திருப்பவர்கள் அனைவரும் பெருந்தேசியவாதத்திற்குத் துணைபோகின்றவர்களாகத்தான் இருக்கின்றார்கள் என்பதை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் - என்றார். (ம)

# பேரம்பேசும் வாய்ப்புகளை தவறவிட்டது கூட்டமைப்பு

## சந்திரகுமார் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஜூன் 23

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பலமான பேரம்பேசும் வாய்ப்புக்களைத் தவறவிட்டுவிட்டு மீண்டும் பேரம்பேசுவதற்கு சக்தியைக் கோருகின்றனர் இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளர்களில் ஒருவரான சந்திரகுமார் முருகேசு.

கிளிநொச்சி அம்பாள் குளத்தில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களால் பல தடவைகள் பல தேர்தல்களில் வழங்கப்பட்ட பலமான பேரம் பேசுகின்ற வாய்ப்புக்களை எல்லாம் வீணடித்துவிட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மீண்டும் தமிழ் மக்களிடம் பேரம்பேசும் சக்தியைத் தமக்கு வழங்குமாறு கோருவது மீண்டும் மீண்டும் தமிழ் மக்களை ஏமாற்றும் செயல்.

மீள்குடியேற்ற ஆரம்ப காலத்தில் மக்கள் எதுவுமற்றவர்களாக எதுவும் இல்லாத பிரதேசங்களில் மீள்குடியேறிய போது நாம் அந்த மக்களிடம் அரசியல் செய்யவில்லை. நான் அந்தக் காலத்தில் மக்கள் மத்தியில் அரசியல் செய்திருந்தால் 2015ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலிலும் வெற்றிபெற்று நாடாளுமன்ற உறுப்பினராக இருந்திருப்பேன். ஆனால் நான் அந்தக் காலத்தில் மக்களின் அவலத்தில் அரசியல் செய்ய விரும்பவில்லை. மாறாக 'கையில் பைகளுடன் மீள்குடியேறிய மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டுவரும் நடவடிக்கைகளில் ஈடுபட்டோம், அழிந்து கிடந்த பிரதேசத்தை மீளக் கட்டியெழுப்ப கடுமையாக உழைத்தோம். அதன் விளைவே 2011 தொடக்கம் 2015 வரையான காலப்பகுதிக்குள் கிளிநொச்சி மாவட்டம் துரித அபிவிருத்தி அடைந்த மாவட்டமாக மாறியது - என்றார். (ம-214)

# தமிழர்களின் உணர்வுடன் ஒன்றித்ததே கூட்டமைப்பு

## *வினோநோகராதலிங்கம் கூறுகிறார்*

மன்னார், ஜூன் 23

தமிழர்களின் உணர்வுடன் ஒன்றித்ததே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அது யாரால் உருவாக்கப்பட்டதோ அவர்களின் எண்ணத்தை, விருப்பத்தை நிறைவேற்ற இன்றளவும் பயணித்துக் கொண்டிருக்கின்றது - இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.விநோநோகராதலிங்கம்.

மன்னாரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பலர் வெளியேறியுள்ளனர். எனினும் கூட்டமைப்பு தடம் பிரழாது, தடுமாறாது. அதன் பாதையில் தொடர்ந்து பயணித்துக் கொண்டிருக்கின்றது. தமிழர்களின் உணர்வுடன் ஒத்துப்போகின்ற நிலையில்தான் எமது பயணம் இன்றளவும் பயணிக்கின்றது. எதிர்காலத்தில் மக்கள் தரும் ஆணையின் ஊடாக கூட்டமைப்புப் பலப்படும். அதன் மூலம் மக்களின் அபிலாஷைகள் நிறைவேறும். வாய்ப்புக்களைச் சரிவரப் பயன்படுத்துங்கள்: தவறவிடாதீர்கள்-என்றார். (ம-56)

# வர்த்தக நிலையம் உடைத்து திருட்டு

ஹற்றன்,ஜுன் 23

ஹற்றன் நகரில் உள்ள வர்த்தக நிலையம் உடைத்து, அங்கிருந்து சுமார் 4 லட்சம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை நடந்துள்ளது.

வர்த்தக நிலையத்தை உடைத்து பணம் திருடும் காட்சி அங்கிருந்த சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியுள்ளது.

பசளை விற்பனை செய்யும் வர்த்தக நிலையத்தில் திருட்டு நடந்துள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க)

# வீழ்ந்த விண்கல் தொடர்பில் புவியியல் பிரிவு ஆராய்கிறது

கொழும்பு, ஜுன் 23

கண்டியில் வானில் இருந்து மர்ம கல் ஒன்று வீழ்ந்திருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

பேராதனை ஜேம்ஸ் பௌத்த மத்திய நிலையத்துக்கு அருகில் இந்தக் கல் கண்டறியப்பட்டுள்ளது. இந்தக் கல் தொடர்பில், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புவியியல் பிரிவு ஆராய்வுகளை ஆரம்பித்துள்ளது.

வெள்ளை நிறத்திலான இந்தக் கல் நேற்றுமுன்தினம் இரவு அல்லது நேற்றுமுன்தினம் அதிகாலை அல்லது அதற்கும் முதல்நாள் வானிலிருந்து வீழ்ந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.


இதேபோன்று வேறு கற்கள் அந்தப் பிரதேசத்தின் சுற்றுவட்ட பகுதிகளில் வீழ்ந்துள்ளனவா என்று அவதானித்த போதும் எதுவும் கண்டறியப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

1605 கிராம் நிறையுடைய இந்தக் கல் 16 சென்ரிமீற்றர் நீளமும், 7 சென்ரிமீற்றர் உயரமும் கொண்டுள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் அத்துல சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இது விண்கல் என சந்தேகிக்கக் கூடிய பொருளாகவே உள்ளது. இது கண்டறியப்பட்ட இடத்தில் இவ்வாறான வேறு பகுதிகள் இல்லாமையால் இது ஆற்றிலிருந்து அடித்து வரப்பட்ட கல்லாக இருக்கலாம் என்றும் கருதலாம். எனினும், இது இயற்கைக்கு மாறாக உள்ளது.

வெள்ளைக் கல்லில் சற்று எரிந்த தன்மை காணப்படுகின்றது. இதனைச் சோதனையிட்டு விண்கல்லா என்பது உறுதி செய்யப்படும் என்று பேராசிரியர் மேலும் தெரிவித்துள்ளார்.

“காலையிலோ அல்லது இரவிலோ விண்கல் என்று நாங்கள் நினைக்கும் பொருள் ஒன்று வீழ்ந்து கிடந்தது. விண்கல்லின் ஒரு பகுதி தரையில் வீழ்ந்து விட்டது என்றே நாங்கள் நினைக்கின்றோம். மேலதிக விசாரணைகளுக்காக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அந்தக் கல் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று பௌத்த மத்திய நிலையத்தின் விகாராதிபதி யட்டியன்தொட்டை சந்தானந்த தேரர் தெரிவித்துள்ளார். (க)



# ஆபத்தான கட்டத்தில் கொரோனாத் தொற்று!

## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 23

கொரோனா வைரஸ் பெருந்தொற்று புதிய மற்றும் ஆபத்தான கட்டத்தை தற்போது எட்டியுள்ளது என்று உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது. இது தொடர்பில் உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரொஸ் அதனொம் கெப்ரியேசுஸ் தெரிவித்துள்ளதாவது;

கொரோனா வைரஸ் தொற்றால் உலகெங்கும் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை ஒன்பது மில்லியனை நெருங்கி இருப்பதோடு உயிரிழப்பு நான்கரை இலட்சத்தை கடந்துள்ளது. உலகம் ஒரு புதிய மற்றும் ஆபத்தான கட்டத்தில் உள்ளது. வீட்டில் இருப்பதால் அதிகமான மக்கள் சோர்வடைந்திருப்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

மேலும் பல நாடுகள் தமது சமூக மற்றும் பொருளாதாரத்தைத் திறப்பதில் ஆர்வம் காட்டுவதையும் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் வைரஸ் இன்னும் வேகமாகப்பரவுகிறது. இன்னும் அது உயிராபத்துக் கொண்டது என்பதோடு பெரும்பாலான மக்கள் இன்னும் எளிதாகப் பாதிக்கப்படக் கூடியவர்களாக உள்ளனர்- என்றார். (க)

# நீண்ட தூர பேருந்து சேவை ஊழியர்களுக்கு ஓய்வு அறை

கொழும்பு, ஜூன் 23

நீண்ட தூர சேவையில் ஈடுபடும் பேருந்து ஊழியர்களுக்காக கொழும்பு - பெஸ்டியன் மாவத்தை பஸ் நிலையத்தில் ஓய்வு அறையை அமைக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

தொடர்ந்து சேவையில் ஈடுபடும் பஸ் சாரதிகளும் நடத்துநர்களும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நிலான் மிரண்டா குறிப்பிட்டார்.

தூர சேவைகளில் ஈடுபடும் சாரதிகள் உரிய முறையில் ஓய்வெடுக்காமையால் விபத்துகள் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் அதிகமாகவுள்ளது. தற்போது அவர்களின் ஓய்வு நேரத்தை கழிப்பதற்கு உரிய இடம் இல்லை. அதனால் தேவையான வசதிகளுடன் கூடிய ஓய்வு அறைகளை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (எ)

# பாதாளக் குழுவுடன் தொடர்பு மூவர் கைது

கொழும்பு, ஜூன் 23

பாதாள-உலகக் குழு உறுப்பினர் ஒருவரின் உதவியாளர் உள்ளிட்ட மூவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்றுத் திங்கட்கிழமை ஹங்வெல்ல பகுதியில் கைது செய்யப்பட்டனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாதாள உலகக் குழுவின் உறுப்பினரான இந்து என்றழைக்கப்படும் இந்துனில் குமாரவின் உதவியாளரான (அக்கு) புத்திக ஜயதிலக்க என்பவர் உள்ளிட்ட மூவர் இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடமிருந்து கூரான ஆயுதங்கள் நான்கும், போலி துப்பாக்கியொன்றும், 325 கிராம் கேரள கஞ்சாவும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளுக்காக கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் ஹங்வெல்ல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (க)

# சங்கிலி அறுப்பு இருவர் கைது

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் நடந்த தங்கச் சங்கிலி அறுப்புச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நேற்று இருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் யாழ்ப்பாணம், கோப்பாய், மானிப்பாய் ஆகிய பகுதிகளில் நடந்த சங்கிலி அறுப்புச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. சந்தேகநபர்கள் பொம்மைவெளியைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களிடமிருந்து தங்கச் சங்கிலி ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்றும், மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-159)

# கும்பாபிஷேகம்

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 5.50 மணி முதல் காலை 6.30 மணிவரை நடைபெறவுள்ளது. இன்று காலை 6 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை எண்ணெய்காப்பு இடம்பெறும்.

இந்த நிகழ்வுகளில் அம்பாள் அடியார்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ)

# ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகிறார் அநுர!

கொழும்பு, ஜூன் 23

அரசியல் பழிவாங்கல் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு முன்னிலையாகவுள்ளார். நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர் இது தொடர்பில் தெரிவித்ததாவது

எமது நாட்டில் தேசிய சொத்துக்கள் பல அரசியல் குழுக்களால் மோசடி செய்யப்பட்டுள்ளன. இலங்கையின் மொத்த் கடன் தொகை 11 டிரில்லியன் என்றும் அதில் 1.8 டிரில்லியன் மாத்திரமே செலுத்தப்பட்டுள்ளதாகவும் முன்னாள் கணக்காய்வாளர் தெரிவித்துள்ளார். இவ்வாறான பணத்தொகை எமது நாட்டிலுள்ள மோசடிக்காரர்களால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இதற்கு எதிராக நாம் கட்சி ரீதியாக தொடர்ச்சியாக செயற்பட்டுள்ளோம். இவை தொடர்பில் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு, குற்றப்புலனாய்வுப் பிரிவு, எப்.சி.ஐ.டி. என்பவற்றில் நாம் முறைப்பாடளித்தீருக்கின்றோம். முறைப்பாடளித்தது மாத்திரமின்றி அவற்றுக்கான நீதியைப் பெற்றுக் கொள்வதற்கான போராட்டங்களிலும் ஈடுபட்டுள்ளோம்.

நாம் ரணில் விக்கிரமசிங்க, லக்ஸ்மன் கிரியெல்ல , மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் மஹிந்த ராஜபக் ஷவுக்கு எதிராக அவர்கள் முன்னிலையிலேயே நாடாளுமன்றத்தில் குற்றம் சுமத்தியுள்ளோம். நாடாளுமன்றத்தில் மாத்திரமின்றி அதற்கு வெளியிலும் பல போராட்டங்களை முன்னெடுத்துள்ளோம். தற்போது எமக்கு அரசியல் பழிவாங்கல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

இந்த ஜனாதிபதி ஆணைக்குழு ஊழல், மோசடிக்கு எதிரான போராட்டத்தின் ஒரு பகுதியாக இருப்பதற்கு அந்த அழைப்பை நாம் விரும்பி ஏற்றுக் கொள்கின்றோம்- என்றார். (எ)

# கருணாவின் கருத்துத் தவறு ஆனால் நடவடிக்கை இல்லை

## சுதந்திரக்கட்சி கூறுகின்றது

கொழும்பு, ஜூன் 23

இராணுவத்தினரைக் கொன்றதாக கருணா கூறிய விடயங்கள் தவறானவை. எனினும் அவரால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களுக்கு எதிரான நடவடிக்கை குறித்து கட்சி ரீதியாக எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் பேராசிரியர் ரோஹண லக்ஷமன் பியதாச தெரிவித்தார். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினரான கருணா அம்மான் முன்வைத்துள்ள சர்ச்சைக்குரிய கருத்துக்கள் தொடர்பில் கட்சியின் நிலைப்பாட்டை வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

கருணா அம்மான் இவ்வாறான சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்பது முன்னரே அனைவரும் அறிந்த விடயமாகும். அவற்றைப் பற்றியும் அவரது இவ்வாறான செயற்பாடுகளைப் பற்றியும் ஆராய்வதற்கு காலம் இருந்தது. எனினும் அப்போது அவை பற்றி ஆராயப்படவில்லை.

தற்போது அவை பற்றி ஆராய்வதில் பயனில்லை. எனினும் அமைதியான சூழலில் இவ்வாறான கருத்துக்கள் முன்வைக்கப்படுவது பொருத்தமாக இருக்காது. எனவே அவருக்கு எதிராக சட்ட ரீதியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் அவற்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்கமுடியாது.

அத்தோடு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இதுவரையில் இவ்விடயம் தொடர்பில் கட்சி ரீதியாக எவ்வித தீர்மானத்தையும் எடுக்கவில்லை. எனவே கட்சியின் ஸ்திரமான நிலைப்பாட்டைத் தற்போது கூற முடியாது. என்றார். (எ)

# சுயதொழில் உற்பத்திகளை விற்கமுடியாத நிலைமை

## பெரும் சிரமத்தில் உற்பத்தியாளர்கள்

வவுனியா, ஜூன் 23

வசதியற்ற பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் சிறியளவிலான சுய தொழில் உற்பத்திப் பொருள்களை சந்தையில் விற்பனைசெய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பல சுயதொழில் நிலையங்களை மூடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று வவுனியா கன்னாட்டி கணேசபுரம் மக்கள் தெரிவித்துள்ளனர்.



வன்னி மக்கள் காப்பகத்தால் சுய தொழில் உற்பத்திப் பொருள்களை மேற்கொள்ளும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களை ஊக்குவிக்கும் நடவடிக்கை கிராமங்கள் தோறும் இடம்பெற்று வருகின்றது. இந்தநிலையில் நேற்றைய தினம் குறித்த கிராமத்துக்கு சென்ற வன்னி மக்கள் காப்பகத்தின் பிரதிநிதிகள் அந்தப்பகுதி மக்களுடன் கலந்துரையாடியிருந்தனர்.

அதன்போதே மேற்கண்ட விடயத்தை அவர்கள் தெரிவித்தனர்.

மிக்சர், மரவள்ளி, கடலை, பகோடா போன்ற சுயதொழில் உற்பத்திகளை நீண்ட வருடங்களாக விற்பனை செய்து வருகின்றோம். தற்போது மூலப் பொருள்களின் விலை சந்தையில் அதிகரித்துக் காணப்படுகின்றது. தேங்காய் எண்ணெய், மரக்கறி எண்ணெய் உட்பட அனைத்து பொருள்களின் விலைகள் திடீரென்று அதிகரித்துள்ளன. அதனால் நெருக்கடி நிலையை எதிர்நோக்கியுள்ளோம்.

இந்தத் தொழிலை நம்பியுள்ள பல குடும்பங்கள், வயோதிபர்கள், இளையோர் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தநிலை தொடர்ந்து நீடிக்குமானால் பல குடும்பங்கள் மேலும் பாதிக்கப்படும் நிலை ஏற்படும்.

எனவே இதிலிருந்து மீண்டு சுய தொழிலை மேற்கொள்வதற்கு உதவவேண்டும்.

தற்போது வறட்சியுடனான காலநிலையால் கிணறுகளில் தண்ணீர் வற்றியுள்ளது. நெடுந்தூரம் சென்று குடிதண்ணீர் உட்பட அத்தியாவசியத் தேவைக்கு தண்ணீரைப் பெற்றுக்கொள்கின்றோம். விவசாயச் செய்கைகள், வீட்டுத் தோட்டம் போன்றனவும் பாதிக்கப்பட்டுள்ளன.


இங்குள்ள பொதுக்கிணறுகள் கவனிப்பின்றியுள்ளன. அவற்றை ஆழப்படுத்த வேண்டியுள்ளது என்று அங்குள்ள மக்கள் தெரிவித்தனர்.

இந்தப் பகுதி மக்களின் சுயதொழிலை மேம்படுத்துவதற்கு தமது பொறிமுறையூடாக உற்பத்தி பொருள்களை வழங்கி மீண்டும் அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் திட்டம் தொடர்பாகவும் இதன்போது அமைப்பின் பிரதிநிதிகள் விளக்கமளித்திருந்தனர். (த-110)

# 'ஒரு நாள்' முகக் கவசத்தை மாணவர் தவிர்க்க வேண்டும்

## மாணவருக்கு அறிவுறுத்தல்கள்

கொடிகாமம், ஜூன் 23



பாடசாலைகள் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பிக்க விருக்கும் நிலையில், மாணவர்கள் கடைப்பிடிக்கவேண்டிய நடைமுறைகள் பற்றி பல பாடசாலைகளும் அறிவுறுத்தி வருகின்றன. கிளிநொச்சி இந்துக் கல்லூரியும் இத்தகைய அறிவுறுத்தலை விடுத்துள்ளது.

அவை வருமாறு:

1. மாணவர்கள் முகக் கவசங்கள் கட்டாயம் அணிந்திருக்க வேண்டும்.
2. ஒரு மாணவன் அல்லது மாணவி குறைந்தது மூன்று முகக் கவசங்கள் வைத்திருத்தல் வேண்டும்.
3. இயன்றவரை பொதுப் போக்குவரத்தை தவிர்க்க வேண்டும்.
4. பாடசாலைக்கு நேரத்துடன் சமூகமளித்தல் வேண்டும்.
5. ஒன்றுகூடுவது, மற்றயவர் பொருள்களை கடன் வாங்கி பயன்படுத்துவது தவிர்க்கப்பட வேண்டும்.
6. பாடசாலை ஒழுக்க விதிகள் முழுமையாக பின்பற்றப்படும். (தலை, ஆடை அலங்காரங்கள்)
7. பாடசாலை சிற்றுண்டிச்சாலை திறக்கப்படமாட்டாது என்பதால் உணவு, குடிதண்ணீர் என்பனவற்றை வீட்டிலிருந்து தயார்படுத்தி கொண்டுவருதல் வேண்டும்.
8. மாணவர் ஒருவருக்கு கை கழுவுவதற்கு 25 வினாடிகள் வழங்கப்படும்.
9. எல்லோரும் தனியாள் இடைவெளியைப் பேண வேண்டும்.
10. சுகாதாரச் செலவுக்காக ஒரு மாணவன் அல்லது மாணவியின் குடும்பத்திடமிருந்து 500 ரூபா கோரப்பட்டுள்ளது.
11. கை துடைப்பதற்கான துணி ஒவ்வொரு மாணவரும் வைத்திருத்தல் வேண்டும்.
12. மாணவர்களின் உடல் வெப்பநிலை பரிசோதிக்கப்படும். அதன் பின்னரே வகுப்புக்குள் அனுமதிக்கப்படுவர்.
13. கை கழுவுவதற்கான தண்ணீர் தொட்டிகளை அமைக்கும் வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படும்.
14. இருமல், சளி, காய்ச்சல் போன்ற ஒன்றாயினும் பிள்ளைகளிடம் காணப்பட்டால் குறித்த மாணவன் அல்லது மாணவி பாடசாலைக்கு சமூகமளிப்பதைத் தவிர்ப்பதுடன் தகவலை வகுப்பாசிரியருக்கு உடனடியாகத் தெரியப்படுத்த வேண்டும்.
15. ஒரு நாள் முகக்கவசம் (மாஸ்க்) தவிர்க்கப்பட வேண்டும்.
16. கைகழுவும் முறை பெற்றோர்களுக்கு ஆசிரியர்களால் செய்து காட்டப்பட்டது. இதனை பெற்றோர் மாணவர்களுக்கு அறிவுறுத்தி பாடசாலைக்கு அனுப்பவும்.
17. அனைத்து சுகாதார நடவடிக்கைகளும் தினந்தோறும் பின்பற்றப்பட வேண்டும். என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (த-159)

# கொரோனா வாரம் சந்தைகளில் ஆரம்பிப்பு

சாவகச்சேரி, ஜூன் 23

யாழ்ப்பாண பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டிலான கொரோனா வார முதல்நாள் நேற்று ஆரம்பித்தது.

முதல்நாள் நிகழ்வாக பிரதேச சந்தைகளில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியக அதிகாரிகள், பொலிஸார், சாவகச்சேரி நகரசபையினர், சாவகச்சேரி பிரதேச சபை, தென்மராட்சி பிரதேச செயலகம் ஆகியன வற்றின் அலுவலர்கள் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

சந்தைகளில் வியாபாரிகளும் நுகர்வோர், உற்பத்தியாளர்களும் சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிப்பதில் ஆர்வம் காட்டினர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று சாவகச்சேரி, கொடிகாமம், வரணி, கைதடி ஆகிய சந்தைகளில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இன்று அனைத்து கோவில்களிலும், நாளை அனைத்து அரச, தனியார் அலுவலகங்களிலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். (த-9)

# நாட்டில் எலிக்காய்ச்சல் இதுவரை 2,800 பேருக்கு!

கொழும்பு, ஜூன் 23

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் சுமார் 2ஆயிரத்து 800 பேர் எலிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், எலிக்காய்ச்சலால் 12 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி, கொழும்பு, களுத்துறை, காலி, ஹம்பாந்தோட்டை, மாத்தறை, அநுராதபுரம், பொலன்னறுவை மற்றும் கேகாலை மாவட்டங்களிலேயே எலிக்காய்ச்சலால் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## போர்க்குற்றம் சுமத்தப்பட்ட 150 அதிகாரிகள்

# வெளிநாட்டுக்கு வந்தால் கைதுசெய்ய உத்தரவாம்

கொழும்பு, ஜூன் 23

விமானப்படையினரைத் தவிர இராணுவம், கடற்படையின் விசேட படைப்பிரிவு, பயங்கரவாத தடுப்புப் பிரிவு, குற்றவியல் விசாரணைப் பிரிவு, பொலிஸ் என பாதுகாப்புத் துறையின் 150க்கும் மேற்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக போர்க் குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன. அதனால் அவர்கள் வெளிநாடு சென்றால், கைது செய்யப்படும் ஆபத்து இருப்பதாக சிங்கள இணையத்தளம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

இந்த அதிகாரிகளின் பெயர்ப் பட்டியலை, ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் அதிகாரியும் உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச திட்டத்தின் பணிப்பாளருமான யஸ்மின் சூக்கா, சுவிற்ஸர் லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, ஒஸ்ரியா, இத்தாலி உட்பட ஐரோப்பிய நாடுகள் மற்றும் போல்டிக் நாடுகளின் விமான நிலையங்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

சர்வதேச சட்டத்துக்கு அமைய இவர்களைக் கைதுசெய்யுமாறும் சூக்கா கோரியுள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் இளவரசர் செய்யத் அல் ஹுசைன் இதற்கு ஆதரவு வழங்கியிருந்தார்.

இந்த பெயர் பட்டியலில் முன்னாள் இராணுவ அதிகாரிகள் 61 பேரின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த அதிகாரிகளுக்கு எதிராக யஸ்மின் சூக்கா, 76 விசாரணை அறிக்கையை ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு அனுப்பியுள்ளார் என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கொரோனாவிலும் இன, மத வாதம்!

தமிழர்களுக்கு மட்டுமல்லாது தமிழ்க்கடவுளர்களுக்கும் இப்போது போதாத காலம் போலும். இதுநாள்வரை மனிதர்கள் மட்டுமே தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டுவந்த நிலையில், இப்போது கடவுளர்களும் தனிமைப்படுத்தலுக்குள் உள்ளாக்கப்படத் தொடங்கி விட்டார்கள்.

வற்றாப்பளை கண்ணகை அம்மன் தொடக்கம் வல்லிபுர ஆழ்வார் வரை பேதம் பார்க்காமல் இந்தத் தனிமைப்படுத்தல் நீள்கிறது. இந்தப் பட்டியலில் 'லேட்டஸ்ட்டாக' புதூர் நாகதம்பிரானும், நயினை நாகபூஷணியுடன் உள்ளடக்கப்பட்டுவிட்டார்கள். கொரோனா பரவாதிருக்க தனியாள் இடைவெளியைப் பேணவும், ஏனைய சுகாதார நடைமுறைகளைத் தொடரவும் ஆலய வழிபாடுகளில் மிகச் சொற்பமானவர்களே அனுமதிக்கப்படுகிறார்கள். அதை மீறினால் ஆலய வழிபாடுகளில் பங்கேற்போர் தனிமைப்படுத்தப்படுவார்கள் என்று சுகாதாரத் திணைக்களம் ஏற்கனவே அறிவித்துள்ளதுதான். இருப்பினும் தென்னிலங்கையில் எத்தனை பேர் கூடினாலும் பரவாத கொரோனா, ஆறுமுகன் தொண்டமானின் இறுதிச் சடங்கில் ஆயிரக்கணக்கானோர் ஊர்வலமாக நெருக்குவாரப்பட்டு சென்றபோது ஓடி ஒளிந்து கொண்ட கொரோனா, ஜனாதிபதியின் பிறந்ததினக் கொண்டாட்டங்களைக் கண்டு புறமுதுகு காட்டிய கொரோனா தமிழ்க் கடவுளர்களின் ஆலயங்களில் ஒன்றுகூடும்போது மட்டும், பாய்ந்துவந்து பற்றிக்கொள்ளும் என்பது எந்தவகையில் நியாயம்?

சுகாதார விதிகளை நடைமுறைப்படுத்துவதும், தனியாள் இடைவெளி பேணலும் இறுக்கமாகக் கடைப்பிடிப்பதால் எமக்குத்தான் நன்மை பயக்கும். இருப்பினும் இப்போதும் கொரோனா நீடித்திருக்கும் பகுதிகளில் காட்டாத இறுக்கத்தை, கொரோனாவைக் காரணம் காட்டி தமிழர்கள் மீதும், அவர்களது கடவுளர்கள் மீதும் அரசு காட்டுவது தான்தமிழ்மக்களிடம்கடுப்பைக்கிளப்பியிருக்கிறது.

நயினாதீவு நாகபூஷணி ஆலயத்துக்கு அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்களில் 50 பேர் மட்டுமே பங்குபெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. வெளியூரைச் சேர்ந்த பக்தர்கள் பங்கேற்பதைத் தடுக்கும் வகையில் நயினாதீவுக்கான படகுச் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அதைத்தவிர நயினாதீவைச் சேர்ந்தவர்கள் கடல் தாண்டி வெளியிடங்களுக்குச் செல்வதானால் பாஸ் பெற்றே செல்ல வேண்டும். அதுவும் ஒன்று விட்ட ஒருநாள் தான் பயணிக்க முடியும். இப்படி இறுக்கமான விதிகளைப் போட்டு, அவையெல்லாம் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதை கோயிலுக்குள் 'சப்பாத்துக் கால்களோடு 'கண்காணித்துக் கொண்டிருக்கிறது பொலிஸ். ஆனால் அதே ஆலயத்துக்குள் தென்னிலங்கையில் இருந்துவரும் யாத்திரீகர்கள் நூற்றுக்கணக்கில் செல்வதற்கும், அவர்களுக்கான விசேட படகுச் சேவையை நடத்துவதற்கும் எவ்வித தடைகளும் இல்லை. ஆக, ஒரே ஆலயத்தில் சிங்களவர்கள் சென்றால் கொரோனா பரவாது, தமிழர்கள் சென்றால் மட்டும் கொரோனா கொந்தளித்து எழுந்தாடும் என்பது எவ்வளவு பெரிய அபத்தம்.

கொரோனாவில் கூட இனவாதம் பார்க்கும் தென்னிலங்கையர்கள் தான் எங்களுக்குத் தீர்வைத் தூக்கித் தந்துவிட்டு அடுத்த வேலை பார்ப்பார்கள் என்பதும் அதைவிட அபத்தம். எப்போதும் சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டப்போவதில்லைத்தான்.

# நவீன் திஸாநாயக்கதான் ஐ.தே.கவை உடைத்தார்

## இராதா குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 23

**ஐக்கிய தேசியக் கட்சியை இரண்டாக பிளவுபடுத்தியவர் நவீன் திஸாநாயக்கவே. அவர் அமரர் ஆறுமுகன் தொண்டமான், பழனி திகாம்பரம் ஆகியோர் மீது போலிக் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வருகிறார் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவருமான முன்னாள் அமைச்சர் கலாநிதி வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.**



கொட்டகலையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 50 ரூபா கிடைப்பதற்கு தொண்டமான் முட்டுக்கட்டையாக இருந்தார் என நவீன் திஸாநாயக்க தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார். ஆறுமுகன் தொண்டமான் இன்று உயிருடன் இல்லை. அவர் பதிலளிக்கமாட்டார் எனத் தெரிந்துதான் அவர்மீது குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

அதேபோல் தீபாவளி முற்பணக் கொடுப்பனவுக்கு திகாம்பரம் முட்டுக்கட்டையாக இருந்தார் எனவும் குறிப்பிடுகிறார். கொடுப்பனவை வழங்குமாறு அவர்தான் பேச்சுவார்த்தை நடத்தினார். எனவே, எப்படி முட்டுக்கட்டையாக இருக்கமுடியும்? எனவே நவீன் திஸாநாயக்க பொய்யுரைக்கும் அரசியலை முன்னெடுத்து வருகிறார்.

ஐக்கிய தேசியக் கட்சியை இரண்டாக பிளவுபடுத்திய நவீன் திஸாநாயக்கவே, இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர்தான் கூட்டு ஒப்பந்தத்துக்கும் வருவார். எனவே, எப்படி சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுப்பார்?

யானைச் சின்னத்தை மறந்துவிடுங்கள். இம்முறை தொலைபேசி சின்னத்தை மனதில் வைத்து வாக்களிக்கவும். சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியிலேயே நாம் அங்கம் வகிக்கும் கூட்டணி என்பதையும் மறந்துவிடாதீர்கள் - என்றார். (ம)

# இரணைமடுக் குளத்தின் கீழ் 700 ஏக்கரில் இடைப்போகம்

கிளிநொச்சி,ஜூன் 23

கிளிநொச்சி மாவட்டத்தின் மிகப்பெரிய குளமாகிய இரணைமடுக் குளத்தின் மூலம் இதுவரை காலபோகம், சிறுபோகம் என இரண்டு போகங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், இந்த வருடம் இடைப்போகமும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த வருடம் ஏப்ரல் மாதம் கிடைக்கப்பெற்ற மழை வீழ்ச்சியைக் கொண்டு சிறுபோகம் நிறைவடைந்ததும், இடைப்போகம் மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சிமாவட்ட பிரதிநீர்ப்பாசனப் பணிப்பாளர் தம்பிராஜா இராஜகோபு தலைமையில் பரந்தன் பொதுநோக்கு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

கலந்துரையாடலில் 700 ஏக்கரில் இடைப்போகமாக சிறுதானியம் மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது. கலந்துரையாடலில் நீர்ப்பாசன, விவசாய திணைக்கள, கமநல சேவைநிலைய, மாவட்டச்செயலக அதிகாரிகள், விவசாயிகள் கலந்து கொண்டனர். (க-113)

# வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவருக்கான அறிவிப்பு

கொழும்பு,ஜூன் 23

வெளிவாரிப் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் அனைத்து மாணவர்களும் கட்டாயம் தகவல் தொழில்நுட்பத்தில் சித்தி அடையவேண்டும் என்று அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தற்போதுள்ள கல்வி முறையில் பல்கலைக்கழகத்துக்கு வெளியே பயிலும் பட்டதாரிகள் தொழில் வாய்ப்பைப் பெறுவதென்பது இலகுவான காரியமல்ல. தொழிற்சந்தைக்குத் தேவையான விதத்தில் பல்கலைக்கழகங்களிலிருந்து படித்தவர்கள் உருவாகுவதும் இல்லை.

அதனால் இந்த இடைவெளியை நிரப்புவதற்காக புதிய கல்விக் கொள்கைக்கு அமைய எலக்ரோனிக் தொழில்நுட்பம் உட்பட தொழில்நுட்பப் பாடங்கள் பாடத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன- என்றார். (க)

# மீனவர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு,ஜூன் 23

கடற்றொழிலில் ஈடுபடுவோருக்கு வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடற்பிரதேசங்களில் பலத்த காற்று வீசும், கடல் கொந்தளிப்பாகக் காணப்படும் என்பதால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புத்தளத்திலிருந்து, கொழும்பு, மாத்தறை, ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரை ஆழமான மற்றும் ஆழமற்ற கடற்பிரதேசங்களில் காற்றின் வேகம் அவ்வப்போது மணிக்கு 60 கிலோமீற்றர் வேகத்தில் வீசும். அத்தோடு, கடற்பிரதேசங்களில் அவ்வப்போது கடல் கொந்தளிப்பாகக் காணப்படும்.

அதனால் குறித்த கடற்பிரதேசங்களில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் மீனவர்களும், கடற்படையினரும் மிகுந்த அவதானத்துடன் நடந்து கொள்ளுமாறு எச்சரிக்கப்பட்டுள்ளது. (க)

# பேரினவாத நிகழ்ச்சிக்குள் ஐக்கிய மக்கள் சக்தி செல்லாது

## மனோகணேசன் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 23

சிங்கள பௌத்தவாத நிகழ்ச்சி நிரலில் மட்டுமே ஐக்கிய மக்கள் சக்தி பயணிக்க முடியாது. அவ்வாறு பயணிப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தனியொரு கட்சியல்ல. தனியொரு நபர் சார்ந்ததுமல்ல என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து அண்மையில் வெளியேறிய மங்கள சமரவீர, அந்தக் கூட்டமைப்பு பொதுமக்கள் முன்னணியின் நகலாக இருப்பதாகவும் சஜித் பிரேமதாஸவை சூழ கடும்போக்காளர்கள் இருக்கின்றனர் என்றும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தார்.

அதேபோன்று, தென்னிலங்கை வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக அத்தரப்பு கடுமையான சில நிலைப்பாடுகளையும் கையிலெடுக்கத் தயாராகி வருகின்றது என்றும் குறிப்பிட்டார். இந்த நிலையிலேயே மனோகணேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சக்தி என்பது தனியொரு கட்சியல்ல. அது கூட்டமைப்பாகும். அதில் அங்கத்துவம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் தலைமைகளும் ஒருங்கே அமர்ந்தே தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படுகின்றன. தனியொருவரின் ஆதிக்கமோ, நிகழ்ச்சி நிரலிலோ செல்லவில்லை.

இவ்வாறான நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை உட்பட அக்கூட்டமைப்பு சிறுபான்மை மக்களின் விடயங்களில் இன்னமும் கரிசனையுடன் காத்திரமான பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்பது எமது கோரிக்கையாகவும் இருக்கின்றது. அதுபற்றிய கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளோம். குறிப்பாக இனங்களுக்கிடையிலான பிரச்சினைகளுக்குத் தீர்வு விடயத்தில் முஸ்லிம்களின் உரிமைகள் உட்பட சிறுபான்மையினரின் விடயங்கள் மீது கரிசனை கொள்ளப்பட்டுள்ளது. அதுபற்றிய பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன - என்றார். (ம)

# பங்குச்சந்தை சுட்டெண் 5 ஆயிரத்தை கடந்தது

கொழும்பு,ஜூன் 23

கொழும்பு பங்குச்சந்தை அனைத்துப் பங்குகளின் மொத்த விலைச் சுட்டெண் 3 மாதங்களுக்கு பின்னர் 5 ஆயிரம் புள்ளிகளைக் கடந்துள்ளது.

கொரோனா வைரஸ் காரணமாக கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்துப் பங்குகளின் மொத்த விலைச் சுட்டெண் தொடர்ந்து குறைவடைந்து வந்திருந்தது.

இந்த நிலையில் கொழும்பு பங்குச் சந்தையின் S&P SL20 3.34% வீதமாக நேற்றுத் திங்கட்கிழமை பதிவாகியுள்ளது.

மேலும் கொழும்பு பங்குச் சந்தை அனைத்துப் பங்குகளின் மொத்த விலை சுட்டெண் 5061.50 புள்ளியாக பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)



# வலிகாமத்தை சீரழித்தவர்கள் பேரினவாதக் கட்சியினர்தான்

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் சாடுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 23


**வளம் மிக்க வலிகாமம் மண்ணை நிர்மூலமாக்கியவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினரும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியினருமே எனக் குற்றஞ்சாட்டினார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன்.**



கீரிமலை நல்லிணக்கபுரம் கிராமத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துக் கூறும்போதே இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஆட்சிக் காலத்தில் குறித்த பேரினவாதக் கட்சிகளின் மூலம் அமைச்சர்களாக இருந்த அங்கஜன் இராமநாதனோ விஜயகலா மகேஸ்வரனோ செய்த அபிவிருத்தி திட்டங்களைவிட நாம் செய்த அபிவிருத்தி திட்டங்களே அதிகம். அவர்கள் அமைச்சர்களாக இருந்தபோது உங்கள் பிரதேசத்திலே இருக்கும் மிகப் பெரிய தொழிற்சாலையான சிமெந்துத் தொழிற்சாலையையோ அல்லது பரந்தன் இரசாயன தொழிற்சாலையையோ இயக்க முடியவில்லை. அவற்றை இயக்கி வேலை வாய்ப்புகளைப் பெற்றுத்தர முயலவில்லை. கடந்த அரசுகள் தெற்கில் உள்ள மாகாணங்களைத் தரமுயர்த்தினவே தவிர எமது வடக்கு கிழக்கு மாகாணத்தை தரமுயர்த்த பின்னடித்தே வந்தன. அவர்கள் முதலில் எமது மாகாணத்தைத் தரமுயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன்பின்னர் அவர்களை ஆதரிப்பதா இல்லையா என்பதனை நாம் தீர்மானிப்போம். கடந்த ஆட்சியில் நாம் பலத்துடன் இருந்தமையாலேயே அரசு எம்முடன் பேச முன்வந்தது. இன்று எமது பலத்தை சிதைப்பதற்காக பல உதிரிக் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் களமிறக்கப்பட்டுள்ளன. இதனை இங்குள்ளவர்கள் சிலர் சிந்திக்க மறுக்கின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்போதும் சோரம்போகாத கட்சி என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். எனவே யாருக்கு வாக்களிக்க வேண்டும் யாருக்கு வாக்களிக்கக் கூடாது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். இதற்கு யாரும் உங்களுக்கு வகுப்பு எடுக்கத் தேவையில்லை. எனவே வாக்குகள் சிதறடிப்பதற்கு நீங்கள் உந்தையாக இருக்கக்கூடாது என்பதில் உறுதியாக இருக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

சமூக ஆர்வலர் சிறி தலைமையில் இடம்பெற்ற இந்த மக்கள் சந்திப்பில் தமிழரசுக்கட்சியின் பொருளாளர் பொ.கனகசபாபதி, வலிவடக்கு பிரதேச சபை உறுப்பினர் சேனாதிராசா கலையமுதன் மற்றும் வலிதெற்கு பிரதேச சபை உறுப்பினர் அன்ரன் ஜூலியஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-ந)



மன்னார் அடம்பன் மத்திய மகா வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து, உடைந்த மேசைகள் உள்ளிட்ட கழிவுப் பொருள்களை கொண்டு தானியக்கமாக இயங்கும் கைகழுவும் தொகுதிகளை அமைத்துள்ளனர். (க)

# கிளாலிச் சூடு திட்டமிட்ட கொலை

யாழ்ப்பாணம், ஜூன் 23

கிளாலியில் கடந்த சனிக்கிழமை மாலை இராணுவச் சிப்பாய் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இளைஞரொருவர் கொல்லப்பட்டமை மனிதக் கொலை என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை இவ்வாறு தெரிவித்துள்ளது தமிழ்த் தேசியக் கட்சி.

சட்டவிரோதமாக மண் ஏற்றிச்செல்ல முயன்ற சம்பவத்துடன் தொடர்புபட்டிருந்தார் என்ற சந்தேகத்தில் எவர் மீதும் துப்பாக்கிச் சூடு செய்வதற்கு எவருக்கும் அதிகாரம் கிடையாது. அந்த இளைஞரைத் துரத்திச் சென்று கைதுசெய்ய முயற்சி எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இச்சம்பவம் தொடர்பில் பாரபட்சம் அற்றதும், முழுமையானதுமான புலன் விசாரணையை பொலிஸார் மேற்கொள்ள வேண்டும் என்று அந்தக் கட்சி மேலும் தெரிவித்தது. (ம)

# குளிக்கச் சென்றவர் சடலமாக மீட்பு

கொழும்பு,ஜூன் 23

குருநாகல், நாரம்மலவில் நீரோடையொன்றில் குளிக்கச் சென்ற நபர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடந்துள்ளது.

சம்பவத்தில், நாரம்மல பகுதியைச் சேர்ந்த 47 வயதான நபர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

நீரோடையொன்றில் குளிக்கச் சென்ற குறித்த நபர் சுமார் 80 அடி ஆழமான கற்குழி ஒன்றில் சிக்குண்ட நிலையிலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலத்தை மீட்பதற்கு கிராமவாசிகள் மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்காததையடுத்து, கடற்படையினர் உயிரிழந்தவரின் சடலத்தை நேற்றுக் காலை மீட்டுள்ளனர். (க)

# கொரோனாவால் வெளிநாட்டில் உயிரிழந்தவர்களுக்கு இழப்பீடு

கொழும்பு,ஜூன் 23

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக வெளிநாடுகளில் உயிரிழந்த இலங்கைப் பணியாளர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், பணியகத்தின் காப்புறுதி நிதியத்தின் ஊடாக இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. அதற்கான பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கொரோனா வைரஸால் வெளிநாடுகளில் பணிபுரிந்த 23 இலங்கைப் பணியாளர்கள் உயிரிழந்துள்ளனர். என்றுள்ளது. (க)

# அரசின் பாதுகாப்பு இருக்கும் தைரியத்தில் கருணா பேச்சு!

## ஓமல்பே சோபித்த தேரர் கண்டனம்



**கொழும்பு, ஜூன் 23**

**அரசின் பாதுகாப்பு இருக்கும் தைரியத்தில்தான் இராணுவத்தினரைக் கொலைசெய்தேன் என்று கருணா பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி, பிரதமர் தலையிட்டு கருணா அம்மானைக் கைது செய்ய வேண்டும். சகோதர இராணுவத்தினரைக் கொலை செய்தமைக்காக கருணாவுக்கு எதிராக இராணுவத்தினர் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு நாம் ஆதரவளிப்போம்.**

இவ்வாறு தென்மாகாண தேரர்களின் தலைவர் ஓமல்பே சோபித்த தேரர் தெரிவித்துள்ளார்.

எம்பிலிப்பிட்டியவில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஆனையிறவு இராணுவ முகாமைத் தாக்கிப் பிடித்தபோது தனது கட்டளையின் அடிப்படையில் மூவாயிரம் இராணுவத்தினரைக் கொலை செய்ததாகக் கருணா அம்மான் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார். அவர் அவ்வாறு தெரிவித்து இரு நாள்கள் கடந்துள்ளபோதும் அவருக்கு எதிராக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கருணா அம்மான் விடுதலைப் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளில் இருந்து, பின்னர் அரச பொறிமுறைக்குள் இணைந்து கொண்டார். பின்னர் கட்சி ஒன்றின் உப தலைவராகவும், பிரதி அமைச்சராகவும் செயற்பட்டிருந்தார். தற்போது தேர்தலில் போட்டியிடும் அவருக்கு கட்சிகளின் தலைவர்கள், அரச அதிகாரிகளின் ஆசீர்வாதம் இருக்கின்றது. அந்தத் தைரியத்தில்தான் அவர் இவ்வாறான கருத்துக்களைக் கூறுகின்றார்.

தன் வாயால் தான் செய்த குற்றத்தைத் தெரிவிக்கும் கருணாவுக்கு எதிராக சட்டமா அதிபர் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்?- என்றார். (ஐ)



## வீதிச் சட்டத்தை மீறுவோருக்கு சட்ட நடவடிக்கை

காலி, ஜூன் 23

காலி வீதியில் பேருந்து முன்னுரிமை ஒழுங்கு வீதிச் சட்டத்தை மீறுவோருக்கு எதிராக இன்று முதல் கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 8 ஆம் திகதி முதல் நேற்று வரையில் இது பொலிஸார் கண்காணிப்பில் செயற்படுத்தப்பட்டிருந்த நிலையில் இன்று முதல் அந்தச் சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்துவதற்குப் பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

அதற்கமைய, காலை 6 மணி முதல் 9 மணி வரை கொழும்புக்குள் பிரவேசிக்கும் பேருந்துகளுக்காக மொரட்டுவை குருச சந்தியில் இருந்து கல்கிஸை மெலிபன் சந்தி, வெள்ளவத்தை ஊடாக கொள்ளுப்பிட்டி வரையில் பேருந்து முன்னுரிமை ஒழுங்கு நடைமுறைப்படுத்தப்படும்.

அத்துடன் கொள்ளுப்பிட்டி, பித்தல சந்தி, கொம்பனிவீதி ஊடாக புறக்கோட்டை வரையிலும் அந்தச் சட்டம் அமுல்படுத்தப்படும்.

அதேநேரம், கொழும்பில் இருந்து வெளியேறும் பேருந்துகளுக்காக மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரை கொம்பனிவீதி, பித்தலை சந்தி, பொது நூலக சுற்றுவட்டம் ஊடாக கொள்ளுப்பிட்டி வரையில் பேருந்து முன்னுரிமை ஒழுங்கு வீதிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

அத்துடன் மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரையான காலப் பகுதியில் கொழும்பில் இருந்து வெளியேறும் பேருந்துகளுக்காக கல்கிஸை மெலிபன் சந்தியில் இருந்து மொரட்டுவை குரு சந்தி வரையில் பேருந்து முன்னுரிமை ஒழுங்கு வீதிச் சட்டம் அமுல்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-ரி2)

## வெளிநாடு செல்ல இருப்போர் 1989 இலக்கத்தை அழைக்கவும்

கொழும்பு, ஜூன் 23

கொரோனா அச்சம் காரணமாக மீண்டும் தொழிலுக்குத் திரும்ப முடியாமல் இருக்கும் பணியாளர்கள், 1989 என்ற அவசர தொலைபேசி இலக்கத்தைத் தொடர்பு கொண்டு தகவல்களை வழங்க முடியும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 17ஆம் திகதிக்கு முன்னர் நாடு திரும்பிய பணியாளர்களுக்கே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதேநேரம் தொழில் நிமித்தம் வெளிநாடு சென்று நாடு திரும்பியவர்கள் தொடர்பாக ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.

அவர்களின் தொழில் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் தரவுகள் சேகரிக்கப்படுகின்றன. கடந்த ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி முதல் இது வரையான காலப்பகுதியில் சுமார் 7 ஆயிரம் தொழிலாளர்கள் நாடு திரும்பியுள்ளனர் என்று பணியகத்தின் பொது முகாமையாளர் மங்கல ரந்தெனிய தெரிவித்துள்ளார். (க)

## கடைசி 'சந்தோஷம்'



கொழும்பு, ஜூன் 23

உயிரிழப்பதற்கு முன்னர் அனைவரும் ஒன்றாய் இருந்து செல்பி எடுத்து சந்தோசப்பட்டுள்ளனர். இந்தத் துயரச் சம்பவம் வத்தளையில் நடந்துள்ளது.

வத்தளை திக்கொவிட்ட கடலில் நீராட சென்ற இரண்டு மாணவர்கள் உள்ளிட்ட நால்வர் கடந்த சனிக்கிழமை நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

நீரில் மூழ்கிய மேலும் இருவர் காப்பாற்றப்பட்டமையுடன், அவர்களில் ஒருவர் ராகம போதனா மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

திக்கொவிட்ட மயானத்துக்கு அருகில் உள்ள கடலில் நீராடுவதற்காக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த எழுவர் சென்றுள்ளனர். அவர்களில் சிலர் நீராடிய போது, கடலில் உருவாகிய சுழியில் அகப்பட்டு முழ்குவதை கரையில் இருந்த உறவினர்கள் அவதானித்துள்ளனர்.

அந்தச் சந்தர்ப்பத்தில் அவர்கள் நீரில் மூழ்குவதை அவதானித்த இளைஞர் ஒருவர் இருவரை மீட்டுள்ளார்.

எனினும் அந்த இளைஞரும் சுழியில் சிக்கி நீருக்குள் காணாமல் போயுள்ளார்.

சம்பவம் தொடர்பில் அறிந்த வத்தளை பொலிஸார் மற்றும் கடற்படை அதிகாரிகள் பொதுமக்களின் உதவியுடன் நீரில் மூழ்கிய ஒருவரை மீட்டுள்ளனர்.

நீரில் மூழ்கிய ஐவர் மீட்கப்பட்டு ராகம மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது, அவர்களில் நால்வர் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டனர். எனினும் அவர்கள் உயிரிழந்து விட்டனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் ஒன்றாய் இணைந்து செல்பி எடுத்துள்ளனர். அது சமூக வலைத்தளங்களில் பரவியுள்ளது. (க)

විශ්ව විද්‍යාල ප්‍රතිපාදන කොමිෂන් සභාව
University Grants Commission

## பல்கலைக்கழகங்கள் நேற்று முதல் ஆரம்பம்

கொழும்பு,ஜூன் 23

நாட்டில் கொரோனா வைரஸ் காரணமாக மூடப்பட்ட பல்கலைக்கழகங்கள் இறுதியாண்டு பரீட்சைக்காக நேற்று திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆனால் பல்கலைக்கழகத்துக்குள் ஒன்றுகூடல், விளையாட்டு என்பனவற்றுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்று பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுத் தவிசாளர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார். (ஐ-ரி2)

## ஒரு நாள் சிசுவுக்கு 8 இடங்களில் கத்திக்குத்து

### நோர்வூட்டில் கொடூரம்

ஹற்றன், ஜூன் 23

பிறந்த ஒரே நாளான சிசு ஒன்று புதைக்கப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளது. அந்தச் சிசுவின் உடலில் 8 இடங்களில் கத்திக்குத்துக் காயங்கள் உள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நோர்வூட் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நோர்வூட் ஜனபதய கொலனி பகுதியில் கடந்த 12 ஆம் திகதி நடந்துள்ளது. சிசுவின் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை தற்போது வந்துள்ள நிலையில் சிசு கத்தியால் குத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட பின்னரே புதைக்கப்பட்டுள்ளது என்று தெரியவந்துள்ளது. இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் சிசுவின் தாய் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார். (ஐ)



# மூக்கை மூடாது விட்டால் ஆபத்து

## மருத்துவ விஞ்ஞானிகள் எச்சரிக்கை

**கொழும்பு, ஜூன் 23**
**கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலில் இருந்து தப்பிக்கும் நோக்கில் முகக் கவசங்களை அணியும் நபர்கள், தமது மூக்கை மூடும்படியாக அணியுமாறு மருத்துவ விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.**

மூக்கு வழியாகச் செல்லும் கொரோனா வைரஸுக்கு நான்கு தினங்களில் 10 மில்லியன் பிரதிகளை உருவாக்க முடியும் என்பதால், மூக்கு மற்றும் வாய் ஆகிய இரண்டையும் மூடும்படியானமுகக் கவசத்தை அணிவதன் மூலம் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து தப்பிக்க முடியும். இது மிக முக்கியமான சுகாதார நடவடிக்கை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மூன்று அடுக்குகளைக் கொண்ட முகக் கவசங்களை சரியாக அணிந்தால், கொரோனா வைரஸ் தொற்றுவது 80 வீதம் குறையும் என மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது. (ஐ-ரி2)

# இந்தியாவில் இருந்து 230 பேர் நாடு திரும்பினர்

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இந்தியா சென்றிருந்த 230 பேர் விசேட விமானம் மூலம் நேற்றைய தினம் நாட்டுக்கு அழைத்துவரப்பட்டனர்.

கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்ட வெளிநாட்டுக் கப்பல்களில் பணிபுரிந்த இந்தியர்களே விமானத்தில் அதிகமாக வந்துள்ளனர் என கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரி தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் இருந்து புறப்பட்ட ஏ.ஐ 281என்ற விமானமே நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது. இவர்கள் அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (ஐ-ரி2)

# உலகக் கிண்ண விவகாரம் ஐ.சி.சியில் முறைப்பாடு

## விரைவில் செய்வேன் என்கிறார் ரஞ்சன்



கொழும்பு, ஜூன் 23
2011ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டம் நிர்ணயம் செய்யப்பட்டதாக தாம் ஏற்கனவே சுமத்திய குற்றச்சாட்டை முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தற்போது உறுதிப்படுத்தியுள்ளார். இது தொடர்பில் ஐ.சி.சியிடம் விரைவில் முறையிடவுள்ளேன் என்று தெரிவித்தார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க. இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

2011ஆம் ஆண்டு இடம்பெற்ற உலகக்கிண்ணத் தொடரில் இறுதியாட்டம் நிர்ணயம் செய்யப்பட்டது என்று நான் ஏற்கனவே தெரிவித்திருந்தேன்.

இதை முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சரும் தற்போது உறுதிப்படுத்தியுள்ளார். இது தொடர்பில் விரைவில் ஐ.சி.சியிடம் முறையிடவுள்ளேன். எனது குற்றச்சாட்டுத் தொடர்பில் சர்வதேச கிரிக்கெட் சம்மேளனத்தின் ஊழல்களுக்கு எதிரான பிரிவின் தலைவர் இலங்கைக்கு வந்திருந்தபோது என்னிடம் விசாரித்தார் - என்றார். (ம)

# 'சூம்' தொழில்நுட்பத்தில் சுவாரசியத் திருமணம்!



கொழும்பு, ஜூன் 23
"சூம்" தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இலங்கை வாழ் பெண் டுபாயில் திருமணம் செய்து கொண்டுள்ளார். கொழும்பில் திருமண ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த நிலையில், பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக கொழும்புக்கு வர முடியாத நிலையில் வீடியோ அழைப்பில் இந்தப் பெண் திருமணம் செய்துகொண்டார்.

நதீக்காகயான் என்ற காதலர்கள் பல ஆண்டுகளாக திருமணம் செய்வதற்கு எதிர்பார்த்திருந்தனர். நதீக்கா டுபாயிலும், கயான் இலங்கையிலும் இருந்தனர். அவர்களுக்குத் திருமண ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆனால் திருமணத் திகதி நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில், நாட்டில் கொரோனாத் தொற்று ஏற்பட்டிருந்தது. அதனால் டுபாயில் இருந்து நதீக்கா வருவதில் சிக்கல் ஏற்பட்டிருந்தது. ஊரடங்கு மற்றும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளால் அந்தத் திகதியில் அவர் நாடு திரும்ப முடியாதிருந்தது. ஆனால் அவர்கள் திருமணத்தை நிறுத்தவில்லை. கடந்த 10ஆம் திகதி அவர்கள் திருமண பந்தத்தில் இணைந்துள்ளனர். "சூம்" தொழில்நுட்பத்தின் மூலம் இந்தத் திருமணம் நடந்தது. இலங்கைக் கலாசாரத்துக்கு அமைய உறவினர்கள், நண்பர்கள் அழைக்கப்பட்டு திருமணம் நடைபெற்றது. திருமணம் முடிந்தவுடன் நதீக்கா டுபாயில் உள்ள கயானின் இல்லத்துக்குச் சென்றுவிட்டார்.

"பெரிய அல்லது சிறிய திருமணங்கள் தேவையில்லை, உங்களை நேசிக்கும் நபர்கள் உங்களுடன் இருக்க வேண்டியது அவசியம். நாங்கள் கிட்டத்தட்ட இணைக்கப்பட்டுள்ளோம். எனது திருமண நாளில் எனது குடியிருப்பிற்கு வந்த சில நண்பர்கள் என்னுடன் இருந்தார்கள். நாங்கள் இணைய வழியில் சம்பிரதாயங்களை பரிமாறிக்கொண்டபோது எனது பெற்றோர், எனது கணவர், அவரது பெற்றோர், குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் இணையத்தளத்தில் இருந்தனர். எங்கள் பெற்றோர் கமராவில் சில சடங்குகளைச் செய்தனர், பின்னர் எனது பெற்றோர் கொழும்பில் உள்ள அவரது வீட்டிற்குச் சென்றனர். நான் எனது வாக்குறுதியை ஏற்றுக் கொண்டு கயானின் டுபாய் குடியிருப்பில் குடியேறினேன், இப்போது அவருடைய மனைவியாக எனது புதிய வீடாக இது காணப்படும் என்று கூறியுள்ளார் நதீக்கா. (ஐ)

# குறைவடைந்துவரும் மின்சார உற்பத்தி!

கொழும்பு, ஜூன் 23
இலங்கை மின்சார உற்பத்தி இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை 22 வீதத்தால் குறைந்துள்ளது என்று இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

இலங்கையின் மொத்த மின்சார உற்பத்தி பாரம்பரியமற்ற மின் உற்பத்தியான சூரிய மற்றும் காற்று, (மினிஹைட்ரோ மற்றும் பயோமாஸ் தவிர்த்து) இந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் 9 லட்சத்து 64 ஆயிரத்து 43 மெகாவோட் ஆக இருந்தது. இது ஜனவரி மாதத்தில் 12 லட்சத்து 46 ஆயிரத்து 63 மெகாவோட்டிலிருந்து 22.7 சதவீதம் குறைந்துள்ளது என தரவுகள் குறிப்பிடுகின்றன.

சுயாதீன மின் உற்பத்தியாளர்களால் இயக்கப்படும் அனல் மின் நிலையங்கள் அல்லது வெப்ப எண்ணெயிலிருந்து தனியார் துறையால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம், 2020 ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை மொத்த மின்சார உற்பத்தியில் இருந்து 25 சதவீதமாக இருந்தது, அதே காலப் பகுதியில் இலங்கை மின்சார சபையால் இயக்கப்படும் எண்ணெய் மின் உற்பத்தி நிலையங்கள் 13 சதவீதத்தை உற்பத்தி செய்தன என தரவு காட்டுகிறது - என்றுள்ளது. (ம)



# அரசியல் செய்கின்றார் பேராயர் மல்கம் ரஞ்சித்

## ஹரின் பெர்னாண்டோ குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 23
கர்தினால் மல்கம் ரஞ்சித் அரசியலில் தொடர்புபடுகின்றார் என்று முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ குற்றம் சுமத்தியுள்ளார்.

மெதிரிகிரியவில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற தேர்தல் பரப்புரை நிகழ்வின்போது அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் இடம்பெற்ற உடனேயே கோத்தாபய ராஜபக்ஷவுக்கான ஜனாதிபதி வேட்பாளர் பரப்புரை ஆரம்பிக்கப்பட்டுவிட்டது.

இதன்போது கர்தினால் மல்கம் ரஞ்சித் விடுத்த அறிக்கை ஒன்றும் கோத்தாபயவின் பரப்புரைக்கு உதவியது.

இதன்காரணமாக தொடர்ந்தும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்து வந்த பெரும்பாலான கிறிஸ்தவர்கள் கோத்தாபயவுக்கு ஆதரவளித்தனர் - என்றார். (ம)




"Lock Down" காலப்பகுதியில் பூரணப்படுத்தப்படவேண்டிய
சகல பாடங்களுக்குமுரிய அலகுகளை உள்ளடக்கிய கையேடு

- 2020 இல் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களே! தரம் 3,4,5 ஆகிய பாடத்திட்டங்களை உள்ளடக்கியதுடன், நீங்களே சுயமாக பயிற்சி செய்து மதிப்பிடக்கூடிய வகையிலும் வெளிவருகின்றது. இது உங்களுக்கான தனித்துவமான படைப்பு.




ஒவ்வொரு
இதழிலும் இரண்டு
புலமைச்சுடர் மாதிரி
வினாத்தாள்களும்
இணைக்கப்
படுகின்றது.

- தரம் 3,4 மாணவர்களே! உங்கள் பாடத்திட்டங்களையும் முழுமையாக உள்ளடக்கிய புலமைச்சுடர் வெளிவருகின்றது.
- குறித்த மாதத்திற்குரிய சகல பாடங்களுக்குமான அலகுப்பரீட்சைகளும் புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்களும் கவர்ச்சிகரமான பரிசில்கள் அடங்கிய அறிவுசார் போட்டிகளும் உள்ளடங்கிய ஒரே ஒரு சுயமதிப்பீட்டு மாதாந்த கையேடு...!



## மாதாந்தம் எதிர்பாருங்கள்..!!

உங்கள் பிரதிகளுக்கு எமது பத்திரிகை முகவர்களிடம் பதிவுகளை மேற்கொள்ளுங்கள். குறிப்பிட்ட பிரதிகள் மட்டுமே வெளிவரவுள்ளதால் பிரதிகளுக்கு முந்துங்கள்.

தொடர்பு: 021 492 7471, 077 656 9617

# சட்டத்துக்கு புறம்பாக செயற்படுகிறது அரசு

## சம்பிக்க குற்றச்சாட்டு

**கொழும்பு, ஜூன் 23**
**கேள்வி மனுக்கோரல் எதுவுமின்றி மின் உற்பத்தி நிலையமொன்றை அமைப்பதற்காக அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளமை சட்டவிரோத செயற்பாடு என்று ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் பாட்டலி சம்பிக்க ரணவக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது;
தற்போது நாட்டுக்கு மின் உற்பத்தி நிலையத்தையும் விட கெரவலபிட்டியில் திரவ எரிவாயு மின்நிலையத்தை அமைப்பதே மிக முக்கியமாகும். மக்கள் இந்த விடயம் தொடர்பில் விழிப்புடன் செயற்பட வேண்டும். மின்சக்தி தொடர்பில் நடைமுறையில் இருக்கும் சட்டத்துக்கு புறம்பாக அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.
அனல் மின் உற்பத்தி நிலையம் அமைப்பது தொடர்பில் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இது சட்டத்துக்கு புறம்பான செயற்பாடாகும். நாட்டில் மின் உற்பத்தி நிலையம் ஒன்று அமைக்கப்படுமாயின் அது அரச கொள்கைக்கு அமைய செயற்பட வேண்டும். போட்டித்தன்மையிலான கேள்வி மனுக்கோரல் இடம் பெற்றிருக்க வேண்டும். எதுவும் இல்லாமல் அனல் மின் உற்பத்தி நிலையத்தை அமைக்க லங்கா விஜய நிறுவனத்தின் சி.எம்.பி.சி.க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. புத்தளத்தில் அமைக்கப்பட்டுள்ள அனல் மின் உற்பத்தி நிலையத்தில் 900 மெகாவோல்ட் மின் உற்பத்தி செய்யப்பட்டாலும் 700 மெகா வோல்ட் மாத்திரமே விநியோகிக்கப்படுகின்றது.
வீண் விரயமாகும் 200 மெகா வோல்ட் மின்சாரத்தைப் பயன்படுத்துவதற்கான திட்டம் எதுவும் இல்லை. இந்த அனல்மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்ட போது, 2006-2007 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற முறைகேடுகளாலேயே இந்தச் சிக்கல் தோன்றியிருந்தது. நிலக்கரி விநியோகத்தின்போதும் பெரும் சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன. கடல் கொந்தளிப்பு அதிகரித்ததால் இந்த நிலக்கரி ஆங்காங்கே சிதறியமையால் 2016 ஆம் ஆண்டு சுற்றுப்புறச் சூழலுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. இந்தச் சிக்கல்கள் காரணமாகவே திருகோணமலையில் அனல் மின் உற்பத்தி நிலையத்தை அமைக்க தீர்மானிக்கப்பட்டபோதிலும், அதுவும் சாத்தியப்படவில்லை. தற்போது அரசின் இந்த முடிவு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும்- என்றார். (ஐ)

# சிறைச்சாலை காவலாளிகள் பணி இடைநீக்கம்

கொழும்பு, ஜூன் 23
கைதிகள் இருவருக்கு கைபேசிகளை பெற்றுக் கொடுக்க முயற்சித்தனர் என்ற குற்றச்சாட்டில் சிறைச்சாலை காவலாளிகள் இருவர் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.
இடை நிறுத்தப்பட்ட இருவரும் விசாரணைகளுக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துஷார உப்புல்தெனிய தெரிவித்துள்ளார்.
இவர்கள் மாத்தறை மற்றும் மஹர ஆகிய சிறைச்சாலைகளில் கடமையாற்றியவர்கள் என்றும், போதைப் பொருள் விற்பனை தொடர்பாக சிறைவைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கே கைபேசிகள் வழங்க முற்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# தே.அ.அட்டை ஒருநாள் சேவை மீள ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 23
தேசிய அடையாள அட்டையைப் பெறும் ஒருநாள் சேவை நேற்று முதல் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று ஆள்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக கடந்த மார்ச் மாதம் 17 ஆம் திகதி முதல் தேசிய அடையாள அட்டை பெறும் ஒருநாள் சேவை நிறுத்தப்பட்டது. தற்போது நாடு வழமைக்குத் திரும்பிவரும் நிலையில் சுகாதார நடைமுறைகளுக்கு அமைய மீண்டும் ஒருநாள் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனினும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தினமும் 250 பேருக்கே அடையாள அட்டைகள் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி2)



# சோளம் விலையைக் கட்டுப்படுத்த கோரிக்கை

கொழும்பு, ஜூன் 23
சோளத்தின் விலையைக் கடுப்படுத்த அரசாங்கம் தலையிட வேண்டும் என்று அகில இலங்கை விவசாய சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.
40 ரூபாவுக்கும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளப்படும் சோளம் சந்தையில் கூடிய விலையில் விற்கப்படுகின்றது என்று சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் குற்றம் சுமத்தியுள்ளார். (ஐ-ரி2)

# ஐ.தே.க. உறுப்புரிமை நீக்கத்துக்கு தடை பிறப்பிக்க மறுத்தது மன்று!

கொழும்பு, ஜூன் 23
முன்னாள் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் 99 பேரின் கட்சி உறுப்புரிமையை ரத்துச்செய்வது தொடர்பான தீர்மானத்துக்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்க கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மறுத்து நிராகரித்துள்ளது. முன்னாள் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டாரவினால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, கட்சியின் செயற்குழுவால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்திற்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிப்பதை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.
மேலும் இந்த மனுவை ஜூலை மாதம் 27ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக தெரிவித்த நீதிமன்றம், மனுவின் பிரதிவாதிகளான ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் மற்றும் பிரதித் தலைவர் ரவிகருணாநாயக்க ஆகியோருக்கு அழைப்பாணை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# 17 நாடுகளில் இலங்கையர் 1,700 பேருக்கு கொரோனா!

கொழும்பு, ஜூன் 23
மத்திய கிழக்கு வலயத்தில் 17 நாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களில் ஆயிரத்து 700 பேருக்கு கொரோனா வைரஸ் பரவியுள்ளது என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடகப்பேச்சாளர் மங்கள ரந்தெனிய தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
இவர்களில் இதுவரையில் 23 பேர் உயிரிழந்துள்ளனர். இது தொடர்பில் அவர்களின் உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகின்றது. உயிரிழந்தவர்களுக்கான இறுதிக் கிரியைகள் அந்தந்த நாடுகளில் தனிமைப்படுத்தல் சட்டத் திட்டங்களுக்கமைய நடைபெறும்.
கொவிட் - 19 வைரஸ் பரவியவர்களில் 200க்கும் மேற்பட்டோர் குணமடைந்துள்ளனர். ஏனையோர் தொடர்ந்தும் சிகிச்சைபெற்று வருகின்றனர்.
சிகிச்சைபெற்று வருபவர்கள் தொடர்பில் அந்தந்த நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகள் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றனர்- என்றார். (க-44)

# இலங்கை வரலாற்றில் மோசமான தாக்குதல்!



## கோத்தாபயவின் செயற்பாட்டை கண்டிக்கிறார் மங்கள சமரவீர

கொழும்பு, ஜூன் 23
மத்திய வங்கியின் அதிகாரிகளை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ மோசமாக கண்டித்தமை பெரும் தவறு என்று தெரிவித்துள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் நிதி அமைச்சருமான மங்கள சமரவீர, 'இலங்கை வரலாற்றில் மத்திய வங்கிமீது இடம்பெற்ற மிக மோசமான தாக்குதல் இது' என்றும் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மத்திய வங்கியின் அதிகாரிகளை ஜனாதிபதி இழிவான முறையில் பகிரங்கமாக அவமானப்படுத்தியது அவர்களை கொடுமைப்படுத்துவதற்கு ஒப்பான செயலாகும். இது கடந்த 70 வருட இலங்கை வரலாற்றில் மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் அதிகாரிகளின் மீது நடத்தப்பட்ட மோசமான தாக்குதல். அரச அதிகாரிகளுடன் சேவை அடிப்படையில் திருப்தியின்மை இருப்பின் அதனை தனிப்பட்ட ரீதியில் விளங்கப்படுத்த முடியும். பொதுவில் அவர்களுக்கு மரியாதை வழங்கப்படுவது அவசியம். இது இலங்கையின் எதிர்காலமான சிறுவர்களுக்கு ஒரு தவறான முன்னுதாரணமாகும் -என்றார். (ம)

# சுற்றிவளைப்பில் 1,186 பேர் கைது!

கொழும்பு, ஜூன் 23
மேல் மாகாணத்தில் நேற்றுக் காலை 5 மணி நிறைவுடன் 24 மணித்தியாலங்கள் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் ஆயிரத்து 186 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேல் மாகாண சிரேஷ்டப் பிரதி காவற்றுறை மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் ஆலோசனைக்கமைய இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்டவர்களில் 291 பேர் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. இதே வேளை கொள்ளைச் சம்பவம் மற்றும் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 86 பேர் கைது செய்யப்பட்டனர். (ஐ)






# சட்டவிரோத கிரவல் அகழ்வு மக்களின் எதிர்ப்பால் நிறுத்தம்

**மன்னார், ஜூன் 23**

**சட்டவிரோதமாக நடைபெற்ற கிரவல் அகழ்வு, அந்தப் பகுதி மக்களின் எதிர்ப்பை அடுத்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட கணேசபுரம் கண்ணாட்டிப் பகுதியில் நேற்று திங்கட்கிழமை காலை கிரவல் அகழ்வு நடந்துள்ளது.**

நுவரெலியா, கண்டி, குருநாகல் போன்ற பகுதிகளைச் சார்ந்தவர்கள் கிரவல் அகழும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். சம்பவத்தை அறிந்த மக்கள் பறையணாலங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்குத் தெரியப்படுத்தினர். பங்குத் தந்தையர்கள் ஆதரவுடன் மக்களும் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.
அந்த இடத்துக்குச் சென்ற செட்டிகுளம் பிரதேச செயலாளரிடம், கிரவல் அகழ்வு நடைபெறும் காணிகளுக்குரிய மக்கள் தற்போது இடம்பெயர்ந்து இந்தியாவில் வசித்து வருகின்றனர்.
அவர்களது குடியிருப்புக் காணிகள், வயல்நிலங்கள் பள்ளமாக்கப்பட்டும் அழிக்கப்பட்டு வருகின்றன. இதனைத் தடுத்து நிறுத்துமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.
மக்களின் கோரிக்கையை அடுத்து, குறித்த பகுதியை மீள்பரிசீலனை செய்யும் வரை கிரவல் அகழ்வு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.
அத்துடன் கிரவல் அகழ்வை முற்றாக நிறுத்தக் கோரி பிரதமருக்கான மனு, மன்னார் மாவட்ட பொதுஜன பெரமுன இணைப்பாளர் செல்வக்குமரன் டிலானிடம் கையளிக்கப்பட்டது. (க-213)

## எளிமையான முறையில் நாகதம்பிரான் பொங்கல்

வவுனியா, ஜூன் 23
வரலாற்றுச் சிறப்புமிக்க வவுனியா புளியங்குளம் புதூர் நாகதம்பிரான் ஆலயப் பொங்கல் விழா அனுமதிக்கப்பட்ட பக்தர்களின் பங்களிப்புடன், சுகாதார நடைமுறைகளைப் பேணி எளிமையான முறையில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.
கொவிட்19 வைரஸ் தாக்கத்தைக் கருத்தில் கொண்டு ஆலயத்தின் பொங்கல் விழாவில் கலந்து கொள்வதற்கு ஆலய நிர்வாகத்தால் பரிந்துரைக்கப்பட்ட 80 பேருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படும் என ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஏனைய பக்தர்கள் திருப்பி அனுப்பப்படுவர் என்று மாவட்டச் செயலர் ஏற்கனவே தெரிவித்திருந்தார்.
பொங்கல் விழாவை முன்னிட்டு காலை முதலே அதிகளவான பக்தர்கள் புதூர் ஆலயத்துக்குச் செல்வதற்காக வந்திருந்தனர்.
ஆனால் ஏ-9 வீதி புதூர் சந்தியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் பொது மக்களை ஆலயத்துக்குள் செல்ல விடாது திருப்பி அனுப்பினர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-110)





## சமய நடைமுறைகளை உதாசீனம் செய்யாதீர்!

### இந்து இளைஞர் பேரவை அறிக்கை

வவுனியா, ஜூன் 23
நயினாதீவு நாகபூஷணி ஆலயத்தில் எமது சமய நெறிமுறைகளைப் பின்பற்றாது உதாசீனம் செய்துள்ளமை கண்டனத்துக்குரியது என்று சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் தலைவர் சிவஸ்ரீ ஜெ.மயூரக்குருக்கள் தெரிவித்துள்ளார்.
நயினை நாகபூஷணி ஆலயத்தில் பொலிஸார் சப்பாத்துக்களுடன் நடமாடியமைக்கு வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:
நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய பெரு மகோற்சவம் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகியது.
இதன்போது பாதுகாப்பில் ஈடுபட்ட பொலிஸாரும் கடற்படையினரும் சப்பாத்துக்களுடன் ஆலயத்தில் நடமாடித் திரிந்துள்ளனர். தெரிந்தே இந்தச் செயலை அவர்கள் செய்துள்ளனர். ஆலயத்துக்கு வரும் ஒவ்வொரு பக்தருடைய நடைமுறைகளையும் நிர்வாகத்தினர் செம்மைப்படுத்த வேண்டும். பல ஆலயங்களில் அவற்றைச் செய்கின்றனர்.
ஆனால் இந்தச் செயற்பாடுகள் மக்கள் மத்தியில் விரக்தியை ஏற்படுத்தியுள்ளன - என்றுள்ளது. (ம-110)

## போரால் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு வீடு

யாழ்ப்பாணம், ஜூன் 23
போரால் பாதிக்கப்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பத்துக்கான புதிய வீடு நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நேற்று திங்கட்கிழமை நடப்பட்டது. புங்குடுதீவு வட்டாரம் ஜே/ 27 கிராம சேவையாளர் பிரிவில், தியாகி அறக்கொடை நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டில் வீடு அமைக்கப்படவுள்ளது.



யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி ருவான் வணிகசூரிய அதற்கான அடிக்கல்லை நட்டார்.
யாழ்.மாவட்ட பாதுகாப்பு படைத்தலைமையகத்தின் சமூக சேவைகளில் ஒன்றாக, வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்காக வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் 512ஆவது பிரிகேடியர் படைத் தலைமையகத்தின் 51ஆம் பிரிவில் இந்த வீடு நிர்மாணிக்கப்படவுள்ளது. (க-106)

# ஆட்டநிர்ணயக் குற்றச்சாட்டு பொய் எனில் சிறைத்தண்டனை

## விளையாட்டுத்துறை அமைச்சின் முன்னாள் சட்ட ஆலோசகர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 23
மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்திருக்கும் ஆட்டநிர்ணயக் குற்றச்சாட்டு பொய்ப் பிரசாரமாக இருந்தால் சர்வதேச கிரிக்கெட் நிறுவனத்தின் சட்டத்தின் பிரகாரம் இரண்டு வருட சிறைத்தண்டனை வழங்கலாம்.
இவ்வாறு விளையாட்டுத்துறை அமைச்சின் முன்னாள் சட்ட ஆலோசகர் சட்டத்தரணி பண்டுக கீர்த்தினந்த தெரிவித்தார்.
2011 உலகக்கிண்ண கிரிக்கெட் இறுதிப் போட்டியின் போது ஆட்டநிர்ணயம் இடம்பெற்றுள்ளது என்று அப்போது விளையாட்டுத்துறை அமைச்சராக இருந்த மஹிந்தானந்த அளுத்கமகே குற்றஞ்சாட்டியுள்ளமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது;
விளையாட்டுக்களில் பிழை, மோசடிகளைத் தடுக்கும் வகையில் 2019இல் அங்கீகரிக்கப்பட்ட சட்டத்தின் கீழ், தற்போது தெரிவிக்கப்படும் ஆட்டநிர்ணயம் இடம்பெற்றிருந்தால், அவர்களுக்கு எதிராக குறித்த சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியாது. ஏனெனில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகேயின் ஆட்ட நிர்ணய குற்றச்சாட்டு அந்தச் சட்டம் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னர் இடம்பெற்ற விடயமொன்றாகும்.
என்றாலும், சர்வதேச கிரிக்கெட் நிறுவனத்தின் ஊழல் ஒழிப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கமுடியும். ஆனால் அதில் பிரதானமாக இடம்பெறவேண்டி இருப்பது இந்தக் கூற்றின் உண்மைத் தன்மை தொடர்பாக தேடிப்பார்ப்பதாகும்.
ஒருவேளை, மஹிந்தானந்த அளுத்கமகேயின் கூற்று பொய்ப் குற்றச்சாட்டாக இருந்தால், இந்தச் சட்டத்தின் பிரகாரம் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும். அவர் பொய்க் குற்றச்சாட்டு ஒன்றைத் தெரிவித்தார் என்ற குற்றத்துக்காக அவருக்கு எதிராக நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, விசாரணையில் குற்றம் ஒப்புவிக்கப்படும் பட்சத்தில் ஒரு இலட்சம் ரூபாவரை தண்டப்பணம் அல்லது இரண்டு வருட சிறைத்தண்டனைக்கு ஆளாகுவார்- என்றார். (ஐ)

# ஈ.பி.ஆர்.எல்.எப்பின் தியாகிகள் தினம்




யாழ்ப்பாணம், ஜூன் 23
ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எப்) கட்சியின் நிறுவகத் தலைவர் தோழர் கே.பத்மநாபா மற்றும் போராளிகள், உயிரிழந்த பொதுமக்களின் 30 ஆம் ஆண்டு நினைவுதினமான தியாகிகள் தினம் மன்னாரில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நினைவுகூரப்பட்டுள்ளது.
மன்னாரில் உள்ள ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பின் மாவட்ட அலுவலகத்தில் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர்.குமரேஸ் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.
நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் ஞா.குணசீலன் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள், உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.
தொடர்ந்து நினைவுரை நிகழ்த்தப்பட்டது. (த-56)

## 'கறாஜ்'ஜில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த

# 6 மோ.சைக்கிள்களுக்கு தீவைத்த விஷமிகள்!

வவுனியா, ஜூன் 23
வவுனியா கற்குளம் பகுதியில் வாகன திருத்தகம் ஒன்றில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த 6 மோட்டார் சைக்கிள்கள் இனந்தெரியாதோரால் நேற்று அதிகாலை எரியூட்டப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.




குறித்த வாகனத் திருத்தகம் மூடப்பட்டிருந்த நிலையில், நேற்றுக்காலை அங்கு சென்ற இனம் தெரியாத நபர்கள் தீயிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
வாகனத் திருத்தக உரிமையாளர் இது பற்றி சிதம்பரபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். விசாரணை நடக்கின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-110)

# காரைநகர் – ஊர்காவற்றுறை இடையே நிரந்தர பாலம் அமைக்கப்படவேண்டும்

யாழ்ப்பாணம், ஜூன் 23
காரைநகர் ஊர்காவற்றுறை இடையே கடற் 'பாதை' போக்குவரத்து இடம்பெற்றுவரும் நிலையில், அதற்குப் பதிலாக நிரந்தரமான பாலம் அமைக்க வேண்டும் என்று இரு பிரதேச செயலக பிரிவு மக்களும் கோருகின்றனர்.
கடற்பாதைப் போக்குவரத்து நேரம் குறித்து ஒதுக்கப்பட்டுள்ளதால் தேவையான நேரத்தில் பயணிக்க முடியாதுள்ளது.
போக்குவரத்து துறையில் மாற்றம் வேண்டி நீண்ட காலமாகப் பேசி வருகின்றோம். எனினும், தொடர்ந்து கடற்பாதையூடாக பிரயாணம் மேற்கொள்வது மிக ஆபத்தானது.
எனவே காரைநகர் பிரதேச செயலாளர், பிரதேச சபை தவிசாளர் ஆகியோரும் அதேபோல ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர், பிரதேச சபை தவிசாளர் ஆகியோரும் ஒருங்கிணைந்த அடிப்படையில் கருத்திட்டத்தை சம்பந்தப்பட்ட அதிகார சபைக்கு முறையான நியாயப்படுத்தல்களுடன் முன்வைக்கும் பட்சத்தில் இந்தத் திட்டம் எதிர்காலத்தில் வலுப்பெறும் என்று மக்கள் கூறுகின்றனர்.
கடற்பாதைப் போக்குவரத்து பழுதடைந்தால் அல்லது அதனை ஓட்டும் செலுத்திகளுக்கு நேரம் இல்லாது இருந்தால், அசாதாரண சூழலில் போக்குவரத்து முற்றாகத் தடைப்படும்.
இவ்வாறான சூழலில் 50 மைல் பஸ் போக்குவரத்து செய்தே இரு பிரதேச மக்களும் தமது தேவைகளை நிறைவுசெய்ய வேண்டிய நிலை உள்ளது என மக்கள் தெரிவிக்கின்றனர். (த-50)

# சன்மார்க்க சங்க குருதிக்கொடை

கொடிகாமம், ஜூன் 23



ஸ்ரீ அகத்தியர் தமிழ் சன்மார்க்க சங்கத்தின் குருதிக் கொடை யாழ்ப்பாணப் பிராந்திய அகில இலங்கை இந்து மாமன்றத்தின் மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.
இந்த நிகழ்வு தவத்திரு வேலன் சுவாமிகளின் ஆசி வழங்குதலோடு சங்கத்தின் பணிப்பாளர் முருகவேல் சதாசிவம் தலைமையில் ஆரம்பமானது.
குருதிக்கொடையாளர்களின் நன்மை கருதி தனியாள் இடைவெளி பேணப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் குருதி வங்கி அதிகாரிகளின் பங்களிப்போடு நிகழ்வு நடைபெற்றது.
நிகழ்வை சிறப்பாக நடத்துவதற்கு சங்கத்தின் போசகரான கனடா வாழ் உறவான சபாரத்தினம் சசிதரன் குடும்பத்தினர் நிதி உதவி வழங்கியிருந்தனர். (த-159)

# கந்தரோடையில் ஒளிரா நிலையில் மின்விளக்குகள்

ஏழாலை, ஜூன் 23
கந்தரோடை பிரதான வீதியில் பொருத்தப்பட்ட மின் விளக்குகள் ஒருமாத காலமாக ஒளிரா நிலையில், வீதி இருளில் மூழ்கியுள்ளது.
ஒரு மாதத்துக்கு முன்னரே பழைய மின்கம்பிகள் மாற்றப்பட்டு கவரிடப்பட்ட மின் வயர்கள் பொருத்தப்பட்டன. எனினும், வீதி மின்விளக்குகள் ஒளிரா நிலையில் உள்ளன.
சுன்னாகம் நகரிலிருந்து கந்தரோடை வழியாக மாசியப்பிட்டி சந்தியூடாக செல்லும் இந்த பிரதான வீதியை அதிகளவான பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# நடுநிலையாக செயற்படுமாறு ஊடகங்களிடம் கோருவேன்

## தேர்தல் ஆணையாளர் கூறுகிறார்

வவுனியா, ஜூன் 23
செய்திகள் மற்றும் அரசியல் நிகழ்ச்சிகளின்போது நடுநிலையாக செயற்படுமாறு ஊடக நிறுவனங்களிடம் கோரிக்கை விடுப்பதற்கு தீர்மானித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.
வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வடக்கு மாகாண தேர்தல் அரச அதிகாரிகளுடனான கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
சுவரொட்டிகள், பதாகைகள், ஒளிப்படங்கள் என்பனவற்றை காட்சிப்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. எனினும், வேட்பாளரின் தேர்தல் பரப்புரை அலுவலகங்களில் கட்சியின் பெயர், சின்னம், இலக்கம் என்பனவற்றை காட்சிப்படுத்த முடியும்.
அத்துடன் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நடைபெறும் பகுதியில் மாத்திரம் சுவரொட்டிகளை காட்சிப்படுத்த முடியும்.
தொலைக்காட்சிகளிலும் வானொலிகளிலும் கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரங்களைக் கட்டுப்படுத்த முடியாது. செய்திகள் மற்றும் அரசியல் நிகழ்ச்சிகளின்போது நடுநிலையாக செயற்படுமாறு ஊடக நிறுவனங்களிடம் கோரிக்கை விடுப்பதற்கும் எதிர்பார்க்கின்றேன்.
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பரப்புரை செய்வதற்கு சகல கட்சிகளுக்கும் காலத்தை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றும் அவர் தெரிவித்தார். (த-10)

# தென்மராட்சி பாடசாலைகளில் துப்புரவுப் பணியில் பெற்றோர்

சாவகச்சேரி, ஜூன் 23
பாடசாலைகள் எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாவதையொட்டி தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் பெற்றோர் துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர்.
அதன்பின்னர் சாவகச்சேரி சுகாதார திணைக்களத்தினர் தொற்று நீக்கி மருந்து விசிறும் பணியில் நேற்று ஈடுபட்டனர்.
இதேவேளை, பாடசாலைகளில் மாணவர்கள், ஆசிரியர்கள் கைகழுவுவதற்கான ஏற்பாடுகளும் மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு காய்ச்சல் ஏற்பட்டால் தனிமையில் இருப்பதற்கான அறைகளும் பாடசாலைகளில் தயார்ப்படுத்தும் பணிகளும் இடம்பெற்று வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.
பாடசாலைகள் ஆரம்பமாவதற்கு வசதியாக முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வலயக் கல்விப் பணிமனை, அதிபர்களுக்கு அறிவித்துள்ளது. அதன்படி அதிபர்கள் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-9).



# இடம்பெயர்ந்த மக்கள் வாக்களிக்க தனிஇடம்

வவுனியா, ஜூன் 23
மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெயர்ந்து வாழும் மக்கள் வாக்களிக்க பிரத்தியேக வாக்களிப்பு நிலையம் அமைக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.
வடக்கில் தேர்தல் பணிகளில் ஈடுப்படவுள்ள ஊழியர்களை தெளிவுபடுத்தும் சந்திப்பு வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
அங்கு அவர் இதனைத் தெரிவித்தார் என்று குறிப்பிடப்பட்டது. (த)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

## செல்லத்துரை சிவநேசன் (நல்லூர் சிவம்)

கடந்த 25.05.2020 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (23.06.2020) செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும்.வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (24.06.2020) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மிருசுவில் வடக்கு,
மிருசுவில்.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## திருமதி செல்லம்மா இராசரத்தினம்

கச்சாய் வீதி, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா இராசரத்தினம் நேற்று (22.06.2020) திங்கட்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி இராசம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சுப்பையா குழந்தை நாச்சியார் தம்பதியரின் அன்பு மருமகளும், இராசரத்தினத்தின் (ஓய்வுபெற்ற ஆயுள்வேத வைத்தியர்) பாசமிகு மனைவியும், சுகிர்தமலர் (சித்த ஆயுள்வேத வைத்தியர்), சிவமலர் (ஆசிரியை, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), சோதிமலர் (லண்டன்) பரமேஸ்வரன் (வைத்திய அதிகாரி, வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை), புனிதமலர் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேசசபை பச்சிலைப்பள்ளி) ஆகியோரின் அன்புத் தாயாரும், அன்னலிங்கம் (சாந் மருந்தகம், கொடிகாமம்), மகேஸ்வரன் (துபாலகம், கிளிநொச்சி), கமலேஸ்வரன் (லண்டன்), வினோத் (ஆசிரியர், கிளி மத்திய கல்லூரி), மதுரா (ஆசிரியை, யா/இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், கிரிசாந் (இணை மருத்துவபீடம், ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்), கீர்த்திகா (விஞ்ஞான பீடம், பேராதனை பல்கலைக்கழகம்), கௌசிகன் (பொறியியல்பீடம் பேராதனை பல்கலைக் கழகம்), கோபிகன் (A/L 2020 கணிதப்பிரிவு, மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), சிவனுஜன் (மென்பொறியியல்துறை NIBM, கண்டி), சோபிதா (முகாமைத்துவ உதவியாளர், யா/போதனா வைத்தியசாலை), துளசிகா (B.Sc Computer Science with Software Engineering, Brunel University), துளக்சன் (Rutlish high School U.K), கஜனன், கவினயா (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி) காருண்யா, கவின்மித்திரன், அருண்நேதரன் (யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), அனுராகவ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், வல்லிபுரம், நடராசா மற்றும் யோகலிங்கம், அமிர்தலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமிர்தமலர், சிவனேசம், சிவரூபவதி, சிவனேஸ்வரி (கனடா), காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, சின்னம்மா, தர்மலிங்கம், லட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2020) செவ்வாய்க்கிழமை மதியம் 01 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பாலாயிறான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

தகவல் :குடும்பத்தினர்.
077 66 48 703, 077 66 47 977
077 900 9578

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30 | 14 |
| 04 | 06 |
| 1981 | 2020 |

## நாகராசா பிரதீபன்

யாழ். கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், டுபாயில் தொழில் புரிந்தவருமான நாகராசா பிரதீபன் கடந்த (14.06.2020) ஞாயிற்றுக்கிழமை டுபாயில் அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகராசா மற்றும் பாலசரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், உஷானியின் அன்புக் கணவனும், யதுஷிகா, விஷ்வா, பிரணவி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயக்குமார் (ராசன்-கனடா), நாகநந்தினி, நகுலன், கிருஷ்ண குமார், வவுந்தன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மாலினி (கனடா), அருணாசலம், தர்சனா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெனீசன் (கனடா), சனோஜன் (கனடா), ஜேனுசன், கர்ஷணன் ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும், தர்சிகா, தனுஜா, சயந்தன், சஞ்ஜீவா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2020) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக பி.ப 1.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார் கோவிலடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.


தகவல்:
குடும்பத்தினர்.
077 8497144

## பிரேசில் 50,000

பிரேசிலில் கொரோனா வைரஸ் தொற்றினால் கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் புதிதாக 640 பேர் உயிரிழந்துள்ள நிலையில் இறப்புக்களின் மொத்த எண்ணிக்கை 50 ஆயிரத்து 617 ஆக அதிகரித்துள்ளது. அமெரிக்காவுக்கு அடுத்து கொரோனா வைரஸ் பாதிப்பு மற்றும் இறப்பு எண்ணிக்கையில் பிரேசில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

(ஏ)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## சின்னப்பொடி கந்தசாமி (யேசுதாசன்)

(ஓய்வு பெற்ற அரசினர் வைத்தியசாலை மருந்துக் கலவையாளர்)

தோற்றம்
14.01.1935

மறைவு
24.05.2020

"ஆண்டவர்தம் அன்பர்களின் சாவு
அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது"
தி.பா.116:15

கடந்த 24.05.2020 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சின்னப்பொடி கந்தசாமி அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று (23.06.2020) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணிக்கு மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியிலும் அதனைத் தொடர்ந்து அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து ஆறுதல்கள், அனுதாபங்கள், அஞ்சலிகள் தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும் மற்றும் உடன் வந்து உதவிகள் புரிந்த உறவுகளுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஞானப்பிரகாசர் வீதி,
மல்வம் உடுவில்.

குடும்பத்தினர்.

## இணக்க...

டுத்தவில்லை. இது என்மீது காழ்ப்புணர்ச்சி கொண்டவர்களின் செயல் என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி சட்டத்தரணியும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவருமான கே.வி.தவராசா.

தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இணக்க அரசியலில் பிரவேசிப்பது அவசியம் என்றும், இன்றைய அரசு எதிர்வரும் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிச்சயம் ஆதரவு வழங்க வேண்டும் என்றும் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கருத்துத் தெரிவித்தார் என இணைய ஊடகங்கள் சிலவற்றில் செய்திகள் வெளியாகியிருந்தன.

அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா மேற்கண்டவாறு "உதயனுக்கு" தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

தனியார் ஊடகம் எவற்றுக்கும் நான் இவ்வாறாகத் தெரிவிக்கவில்லை. இது என்மீது சேறு பூச வேண்டும் என்ற நோக்கத்துடன் புனையப்பட்ட ஒரு செய்தியாகவே நான் பார்க்கின்றேன்.

தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. இந்த நேரத்தில் சில அரசியல் கருத்து மோதல்கள் எனக்கும், கட்சியில் உள்ள சிலருக்கும் ஏற்பட்டுள்ளன. என்மீது அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்ட சிலரின் செயற்பாடு இது வென்பதை நான் நன்கு அறிவேன்.

இணக்க அரசியல் நடத்த வேண்டும் என்று எனது 40 வருட சட்டத்துறை வாழ்க்கையிலும், 10 ஆண்டுகள் அரசியல் வாழ்க்கையிலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் கூறவில்லை. இணக்க அரசியலை நான் முற்றுமுழுதாக வெறுக்கின்றவன்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு ஆதரவளிக்க வேண்டும் என்றும் நான் குறிப்பிடவில்லை. பேச்சுக்கள் நடத்துவது, எமது தேவைகளைப் பெற்றுக்கொள்வது, அரசியல் தீர்வுக்காகப் பேச்சு நடத்துவது இவை சாதாரணமாக நடைபெறும் விடயம். ஆனால் இணக்க அரசியல் என்பதை நான் எப்போதும் சொன்னது கிடையாது என்றார்.

## வெடிமருந்து...

முன்தினம் மாலை நடந்துள்ளது. பளை பொலிஸ் பிரிவில் உள்ள கண்ணிவெடி அகற்றும் தொண்டு நிறுவனத்தின் பட்டறையில் வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளில் இருந்து, சி4 அல்லது ரி.என்.ரி. வெடிமருந்தை திருடிக்கொண்டு இருவர் இருவரும் தப்பிக்க முயன்றுள்ளனர். தொண்டு நிறுவனத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர் அவர்களை அவதானித்துள்ளார். பாதுகாப்பு உத்தியோகத்தரைக் கண்டதும் வெடிமருந்து பொதியை அங்கேயே கைவிட்டு மோட்டார் சைக்கிளில் அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

அவர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றதைப் பாதுகாப்பு உத்தியோகத்தர் தனது அலைபேசியில் ஒளிப்படம் எடுத்துள்ளார். சம்பவம் தொடர்பில் பளைப் பொலிஸாருக்கும், இராணுவத்துக்கும் பாதுகாப்பு உத்தியோகத்தரால் அறிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸாரும், இராணுவத்தினரும் வெடி மருந்துப் பொதியை மீட்டு, அதனை பரிசோதித்த போது, அதனுள் சுமார் 2 கிலோகிராம் எடையுடைய ரிஎன்ரி அல்லது சி4 வெடி மருந்து காணப்பட்டுள்ளது. பாதுகாப்பு உத்தியோகத்தர் வழங்கிய ஒளிப்படத்தில் காணப்பட்ட மோட்டார் சைக்கிள் இலக்கத்தகட்டின் அடிப்படையில், சந்தேகநபர்கள் தேடப்பட்டனர்.

சந்தேகநபர்களில் ஒருவர் எழுதுமட்டுவாழில் வைத்துக் கைது செய்யப்பட்டார். அவர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். மற்றொருவர் அரியாலையில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(சு-20)


### வீடு வாடகைக்கு

கந்தர்மடத்தில் TILLE பதிக்கப்பட்ட 4 அறை வீடு வாடகைக்கு உண்டு. குடும்பத்தினர்க்கு மட்டும்.

077 991 5147

### மாபிள் வேலை

தரமான முறையில் மாபிள் பதித்துத் தரப்படும். ஒர சதுர அடி 45/=. இழுத்து பதிப்பதற்கு 55/= ஆகும்.

தொடர்பு: 077334 1281

### விற்பனையாளர் தேவை

திருநெல்வேலிப் பகுதியில் அமைந்துள்ள கட்டட பொருள்கள் (Hard Ware) விற்பனை நிலையத் திற்கு விற்பனையாளர் ஆண் / பெண் இருபாலாரும் தேவையாக உள்ளது.

தொடர்பு கொள்ளவும்
077 239 7898, 071 417 2364

### வேலையாள்கள் தேவை

1. சுத்திகரிப்பு பணியாளர்
- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- வைத்தியசாலையில் சுத்திகரிப்பு மற்றும் நோயாளர் பராமரிப்பில் முன்அனுபவம் விரும்பத்தக்கது.

2. சமையல் உதவியாளர்
- 15இற்கு மேற்பட்ட நோயாளர்களுக்கான சமையல் முன்அனுபவம்.

தொடர்பு:
Institute of Medical Sciences Trust
Green Memorial Hospital, Manipay
Email:theimsjaffna@gmail.com/ Website:www.imslanka.lk
Tel: 077 5428931 / 0760163615/ (021)2256335 (021)2256990

### யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்.....

இம்மாதம் 20 ஆம் திகதி முதல்

# இந்தியன்

செலக்ஷனின்...



திருமணப் பட்டுச் சாறிகள், கொட்டுன் சாறிகள், வைபவங்களுக்கான சாறிகள், கவுண் வகைகள், சல்வார்கள், சல்வார் துணிகள், டொப் வகைகள் மற்றும் ஏராளமான ஆடைத்தெரிவுகளை விஷேட விலைக் கழிவில் பெற்றுக் கொள்ளலாம்.

ஆடி மாத விஷேட தள்ளுபடி

20.06.2020 முதல்
05.07.2020 வரை

இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்.

குறிப்பு: ஆடைகளைக் கொள்வனவு செய்ய வரும் வாடிக்கையாளர்கள் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றவும்.


## மரண அறிவித்தல்

### திருமதி ஜெயபாலன் சுகந்தினி

(பணியாளர் - உதயன் பணிமனை)



காரைநகரை பிறப்பிடமாகவும், செல்வமாளிகை வெள்ளாந்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயபாலன் சுகந்தினி நேற்று (22.06.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் தம்பிப்பிள்ளை சிவகங்கை தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற ஜெயபாலனின் (உதயன் பணிமனை) அன்பு மனைவியும், ஜெயதுவாரகன் (IIS மாணவன்), ஜெயதுவாரகா (மாணவி, தரம்-08, வைதீஸ்வராக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு:
076 1245183, 076 6555 919

தகவல் : -
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி புனிதமலர் வினோத் அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி
### செல்லம்மா இராசரத்தினம்



அவர்கள் 20.06.2020 அன்று காலமானார்
அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்

ஊழியர் நலன்புரி சங்கம்
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
03 . 01 . 1943



மறைவு
23 . 06 . 2019

### அமரர் அரியநாயகம் கமலாதேவி

திதி: 11.07.2020

ஆண்டொன்று சென்றாலும் மாண்ட
நின் நினைவு எம் மனதைவிட்டு
அகல மறுக்கின்றது. நாம் வேண்டுவது எல்லாம்
இறைவன் திருவடி நிழலில் நின் ஆத்மா
சாந்தி அடைவது ஒன்றே!
நின் எண்ணங்களால்
நிறைந்து கனத்த இதயத்துடன்

தகவல்
கணவன் பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## ஐ.நாவின்...

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா
பண்டாரநாயக்க குமாரதுங்க, முன்னாள்
அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோர்
கூட்டாகத் தெரிவித்தனர்.
'இலங்கையில் போர் முடிவடைந்து 10
ஆண்டுகள் கடந்துவிட்டபோதும்கூட
வடக்கு, கிழக்கு பகுதிகள் தீவிர இராணுவ
மயமாக்கப்பட்டுள்ளது. அங்குள்ள
சிவில் சமூகப் பிரதிநிதிகள் இராணுவத்தி
னரால் கண்காணிக்கப்பட்டு அச்சுறுத்தப்
பட்டு வருகின்றனர். இத்தகைய கண்கா
ணிப்பு மற்றும் அச்சுறுத்தல்கள் அவநம்
பிக்கை மற்றும் அச்சமான சூழலை
உருவாக்குகின்றது' என ஐ.நா. விசேட
அறிக்கையாளர் கிளெமென்ற் நயா
லெட்சோசி வோல், ஐ.நா. மனித உரிமை
கள் சபையில் சமர்ப்பித்துள்ள வருடாந்த
அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். இது
தொடர்பில் சந்திரிகா, மங்கள ஆகியோர்
கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்
டவாறு கூறினர்.
அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:
இந்த நாட்டில் ஜனநாயக ஆட்சி இடம்பெ
றுகின்றதெனில் இராணுவ மயப்படுத்தல்
தேவையே இல்லை. போர் முடிவுக்கு
வந்த பின்னர் வடக்கு, கிழக்கில் தீவிர
இராணுவ மயப்படுத்தல் ஏன் என்று
ஐ.நா. கேள்வி எழுப்புவதில் நியாயம்
இருக்கின்றது.
போரால் பாதிக்கப்பட்ட மக்களைச் சுதந்
திரமாக வாழ வழிவிட வேண்டும். அதை
விடுத்து அவர்களைப் பழிவாங்கும்
நோக்கும் அவர்களின் ஒவ்வொரு நடவ
டிக்கைகளையும் கண்காணித்து அச்சு
றுத்துவது அப்பட்டமான அடிப்படை
மனித உரிமை மீறலாகும்.
பாதிக்கப்பட்ட மக்கள் நீதி கோரி ஜனநா
யக வழியில் ஆர்ப்பாட்டங்களை மேற்
கொள்வது சட்டமீறல் அல்ல. ஆனால்,
அதை இராணுவத்தைக்கொண்டு அடக்க
முயல்வதுதான் பாரிய சட்ட மீறலாகும்.
இதை ஆட்சியிலுள்ளவர்கள் புரிந்து
கொள்ள வேண்டும்என்றனர். (எ-22)

## கருணாவிடம்...

தொடர்பாக விசாரணை நடத்துமாறு குற்
றப் புலனாய்வுப் பிரிவுக்கு பதில் பொலிஸ்
மா அதிபர் நேற்றுப் பணிப்புரை விடுத்தி
ருந்தார். அதற்கமையவே இன்று விசார
ணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
"கருணா அம்மான் கொரோனாவை விட
கொடியவன் என காரைதீவு தவிசாளர்
அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.
அவர் சொன்னது உண்மைதான்.
கொரோனா வந்து 9 பேர்தான் இறந்துள்
ளனர். ஆனால், நாங்கள் ஆனையிற
வில் ஒரு இரவில் 2 ஆயிரம், 3 ஆயிரம்
ஆமிக்காரர்களை கொன்றோம். அவர்
சரியாகத்தான் சொல்லியுள்ளார். பரவா
யில்லை..." என்று விநாயகமூர்த்தி முர
ளிதரன் கருத்து வெளியிட்டிருந்தார்.
அவரின் இந்தக் கருத்து தெற்கு அரசிய
லில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி
யுள்ளது. இது தொடர்பில் விசாரணை
நடத்துவதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு
நியமிக்கப்படவேண்டும் என எதிர்க்கட்சி
கள் வலியுறுத்தி வருகின்றன. (எ-44)

## இரு...

களின் மொத்த எண்ணிக்கை 1,951
ஆகக் காணப்படுகின்றது. குணமடைந்த
வர்களின் மொத்த எண்ணிக்கை 1,526
ஆக உயர்வடைந்துள்ளது.
கொரோனாவால் இதுவரை பாதிக்கப்பட்ட
1,951 பேரில் தற்போது 414 நோயாளி
கள் வைத்தியசாலைகளில் சிகிச்சை
பெற்று வருகின்றனர். 11 பேர் சிகிச்சைக
ளின்போது உயிரிழந்துள்ளனர்.
வைத்தியசாலைகளில் கொரோனா
வைரஸ் தொற்று சந்தேகத்தில் 31 பேர்
கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்
என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம்
அறிவித்துள்ளது. (எ-22)

## நயினாதீவு விவ...

மேற்கொள்ளுமாறு பிரதமர் மஹிந்த
ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார் என்று தக
வல் வெளியாகியுள்ளது.
வட பிராந்தியப் பிரதிப் பொலிஸ் மா அதி
பரை நேற்றுக் காலை தொடர்பு கொண்ட
பிரதமர் இது தொடர்பாக உடனடியாக
விசாரணை மேற்கொள்ளப் பணித்துள்
ளார் என்று தெரியவருகின்றது.
இப்படியான சம்பவங்கள் இனி இடம்பெ
றாதிருப்பதை உறுதிப்படுத்துமாறு அவர்
வலியுறுத்தினார் என்றும், அதையடுத்து
நயினாதீவுப் பகுதிக்குப் பொறுப்பான
சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இந்தச்
சம்பவத்துடன் தொடர்புடையவர்களை
அழைத்து விசாரணைகள் நடத்தினார்
என்றும் தகவல் வெளியாகியுள்ளது. இவ்
வாறான சம்பவங்கள் இனிமேல் இடம்
பெறாது என பாதுகாப்புத் தரப்பினர்
உறுதியளித்துள்ளனர் என்றும் தெரிவிக்
கப்பட்டது. (எ)

## வனவளத்...

பகுதி மக்கள் போரால் 1980, 1990
ஆண்டு காலப்பகுதியில் அங்கிருந்து
இடம்பெயர்ந்தனர். அவர்களின் காணி
கள் பல ஆண்டுகளாகப் பராமரிக்கப்ப
டாது மரங்கள் வளர்ந்திருந்தன. தற்
போது அவர்கள் மீளத் திரும்பி தமது
காணிகளையும், தங்கள் பெற்றோர்
வசித்த காணிகளையும் துப்புரவாக்கி
தற்காலிகக் கொட்டகைகள் அமைத்து
வசித்து வருகின்றனர்.
இந்தக் காணிகள் தங்களுக்குரியது
என்று வனவளத் திணைக்களம் தெரி
வித்து வருகின்றது. அந்தப் பகுதியில்
மக்கள் மீளக் குடியமர்வதற்கும், வீடு
களை அமைப்பதற்கும் வனவளத்
திணைக்களம் தடைகளை ஏற்படுத்தி
வருகின்றது. அங்குள்ள காணிகளைத்
துப்புரவாக்கினாலோ, கட்டுமானப் பணி
களை மேற்கொண்டாலோ சட்ட நடவ
டிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவு
றுத்தி வருகின்றது. அதனால் அந்தப்
பகுதி மக்களுக்கும், வளவனத் திணைக்
களத்தினருக்கும் இடையே அடிக்கடி
முரண்பாடுகள் ஏற்பட்டு வருகின்றன.
இந்த விடயம் தொடர்பாக வவுனியா
வடக்கு பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கி
ணைப்புக் குழுக் கூட்டங்களிலும் முன்
னர் கலந்துரையாடப்பட்டது. இது தொடர்
பில் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்
தபோதும், இந்தப் பிரச்சினைக்கு இன்ன
மும் தீர்க்கமான முடிவு எட்டப்படவில்லை.
இந்தப் பிரச்சினைக்கு உடனடியாகத்
தீர்வு வழங்க வேண்டும் என்று கோரியே
நேற்று அந்தப் பகுதி மக்கள் போராட்டத்
தில் ஈடுபட்டனர். அனைத்துத் தரப்பினர்
மீதும் கொண்டிருந்த நம்பிக்கையை
இழந்துவிட்டோம். எமக்குத் தீர்வு கிடைக்
கும்வரையில் போராட்டத்தைத் தொடர்
வோம் என்று அந்தப் பகுதி மக்கள்
தெரிவித்தனர். (எ-110)

## நயினாதீவு...

டாந்தப் பெருந்திருவிழா தற்போது நடை
பெற்று வருகின்றது. பெருமளவிலான
பக்தர்கள் திருவிழாவில் கலந்துகொள்
வது வழமை. தற்போது நாட்டில் உள்ள
கொரோனாத் தொற்று நிலைமையால்
பக்தர்கள் பெருந்திருவிழாவில் கலந்து
கொள்வது தடை செய்யப்பட்டுள்ளது.
பிற இடங்களில் இருந்து நயினாதீவுக்குச்
செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ள
துடன், அங்கு செல்ல வேண்டுமானால்
ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் "பாஸ்"
பெற்றே செல்லவேண்டியுள்ளது. இத
னால் நயினாதீவுக்கு பிற அலுவல்களுக்
காகச் செல்லும் மக்களும், நயினாதீ
வைச் சொந்த இடமாகக் கொண்ட மக்க
ளும் பெரும் சிரமங்களை எதிர்கொள்
கின்றனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.
பேருந்துகளில் செல்லும் மக்கள் "பாஸ்"
பெறுவதற்காக ஊர்காவற்றுறைப்
பொலிஸ் நிலையத்துக்குச் சென்று பின்
னர் மீண்டும் தங்கள் பயணத்தைத்
தொடர வேண்டிய நிலை காணப்படுகின்
றது என்றும், பேருந்துச் சேவைகள் மட்
டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் நீண்ட
நேரம் அங்கு காத்திருக்க வேண்டியுள்
ளது என்றும் மக்கள் விசனம் தெரிவிக்
கின்றனர்.
அதேவேளை, தெற்கில் இருந்துவரும்
பெரும்பான்மையின மக்கள் "பாஸ்" எது
வும் இன்றி நேரடியாகவே நயினாதீவு
செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். நயி
னாதீவுக்குச் செல்லும் அவர்கள் நாகபூ
சணி அம்மன் ஆலயத்துக்கும் செல்கின்
றனர் என்றும் மக்கள் சுட்டிக்காட்டுகின்ற
னர்.
பாரபட்சமாக நடைமுறைப்படுத்தப்படும்
இந்தப் பாஸ் நடைமுறைக்கு எதிராக
நேற்று புங்குடுதீவைச் சேர்ந்த ஒருவரா
லும், நயினாதீவைச் சேர்ந்த ஒருவரா
லும் இலங்கை மனித உரிமைகள்
ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்
திய அலுவலகத்தில் இரு முறைப்பாடு
கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (எ)

## ரயில்...

திங்கட்கிழமை காலை நடந்துள்ளது.
சமூக சேவையாளரும், இலங்கை செஞ்
சிலுவைச்சங்கத்தின் மன்னார் கிளை
யின் செயலாளராகக் கடமையாற்றிய
இரண்டு பிள்ளைகளின் தந்தையான
ஆ.ரகுசங்கர் (வயது-43) என்பவரே
உயிரிழந்துள்ளார்.
தனது காரை ரயில் பாதையின் அருகில்
நிறுத்திவிட்டு மன்னார் சென்ற ரயில்
முன் பாய்ந்து தற்கொலை செய்துள்ளார்
எனத் தெரிவிக்கப்படுகின்றது. மேலதிக
விசாரணைகளை பறையநாலங்குளம்
பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற
னர். (க-110,56)

## ஆபத்தானதாக...

இவ்வாறு மஹிந்த அணியின் பங்கா
ளிக் கட்சியான தேசிய சுதந்திர முன்ன
ணியின் தலைவரும் அமைச்சருமான
விமல்வீரவன்சஎச்சரிக்கைவிடுத்துள்ளார்.
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்
பிரபாகரனால் உருவாக்கப்பட்ட ஒரே
யொரு கட்சி தமிழ்த் தேசியக் கூட்ட
மைப்பே. தமிழ் மக்கள் தாயகத்தில் சுதந்
திரமாக வாழ வேண்டுமானால் கூட்ட
மைப்பை நடைபெறவுள்ள தேர்தலில்
பலப்படுத்த வேண்டும் என்று ஜனநாய
கப் போராளிகள் கட்சி அழைப்பு விடுத்
துள்ளது. இது தொடர்பில் கருத்துரைக்
கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறி
யுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலிகளால்
உருவாக்கப்பட்ட கட்சி. ஒவ்வொரு தேர்த
லிலும் புலிகளின் பெயரைப் பயன்படுத்
தியே இந்தக் கட்சி வடக்கு, கிழக்கில்
வாக்குகளைப் பெற்று வருகின்றமை
உண்மை. புலிகளின் கொள்கைகளைப்
பின்பற்றும் இந்தக் கட்சி வடக்கு, கிழக்கில்
தற்போது ஆபத்தான கட்சியாக மாறி
வருகின்றது.
இந்தநிலையில், முன்னாள் புலி உறுப்
பினர்களைக் கொண்ட கட்சியான ஜன
நாயகப் போராளிகள் கட்சி நாடாளுமன்
றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்ட
மைப்புக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்
ளமை தொடர்பில் நாம் மிகவும் அவதா
னத்துடன் விழிப்புடனும் இருக்க வேண்
டும். ஒவ்வொரு தேர்தலிலும் புலிகளைப்
பகிரங்கமாக புகழ்ந்து பாடியே தமிழ்த்
தேசியக் கூட்டமைப்பு வாக்குகளைச்
சுருட்டி வருகின்றது.
தடை செய்யப்பட்ட புலிகள் அமைப்பை
முன்னிறுத்தி அதன் முன்னாள் உறுப்பி
னர்களைச் சேர்த்துப் பயணிக்கும் தமிழ்த்
தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள்
நாட்டுக்கு மிகவும் ஆபத்தானவை. இது
தொடர்பில் அரசு கவனம் செலுத்த
வேண்டும்என்றார். (எ-22)

## வழங்கிய...

ருந்தது என்றும் தெரிவித்துள்ளது.
உலகின் ஜனநாயகம் தொடர்பாக
2019ஆம் ஆண்டுக்கான வருடாந்த
அறிக்கையிலேயே ஐரோப்பிய ஒன்றி
யம் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதா
வது;
புதிய ஜனாதிபதியும், அவரது இடைக்
கால அரசாங்கமும் எடுத்த முக்கியமான
கொள்கைத் தீர்மானங்களில் ஒன்று
பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவ
தில்லை என்பதாகும். உத்தேச புதிய சட்
டமூலத்தையும் நீக்குவதற்குத் தீர்மானிக்
கப்பட்டுள்ளது.
ஜி.எஸ்.பி. சலுகையைப் பெறுவதற்கான
பேச்சின்போது, ஐக்கிய நாடுகள் மனித
உரிமைகள் ஆணைக்குழுவிடம் முன்
வைக்கப்பட்ட முக்கியமான வாக்குறுதிக
ளில் உள்ள பயங்கரவாதச் தடைச் சட்
டத்தை நீக்குவது என்பதாகும். ஆனால்
அந்த வாக்குறுதியில் இருந்து இலங்கை
பின்வாங்கியுள்ளது.
2015ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள்
மனித உரிமைகள் சபையின் தீர்மா
னத்தை நிறைவேற்றுவதில் மட்டுப்படுத்
தப்பட்ட அளவு முன்னேற்றமே காணப்
பட்டது. என்றுள்ளது. (எ)

## போதைப்பொருள்...

முன்னாள் அமைச்சருமான மைத்திரி
பால சிறிசேன தெரிவித்துள்ளார்.
பொலனறுவை ஹிங்குராங்கொடவில்
நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில்
உரையாற்றும்போதே அவர் இவ்வாறு
தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
2019 ஏப்ரல் 21 ஆம் திகதி நடைபெற்ற
குண்டு தாக்குதல்கள் தொடர்பில் யார்
எப்படியான விமர்சனங்களை என் மீது
முன்வைத்தாலும், இந்தத் தாக்குதலின்
பின்னணியில் சர்வதேச போதைப்பொ
ருள் கடத்தல்காரர்களே இருந்துள்ளனர்
என்பதை மிகவும் தெளிவாகக் கூறிக்
கொள்கின்றேன்.
போதைப்பொருள்களை ஒழிப்பதற்காக
என்னால் முன்னெடுக்கப்பட்ட தேசிய
வேலைத்திட்டம் அவர்களுக்கு வலியை
ஏற்படுத்தியது. அதனால் என்னை ஆட்
சியில் இருந்து விரட்டுவதற்கும், மக்கள்
மத்தியில் எனக்கான செல்வாக்கை இல்
லாது செய்வதற்கும் பெரும் வேலைத்திட்
டமொன்றை போதைப்பொருள் வியாபா
ரிகள் முன்னெடுத்தனர்.
ஓகஸ்ட் 05 ஆம் திகதிக்கு பின்னரும்
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலை
மையில் கிராமங்களில் போதைபொருள்
ஒழிப்பு நடவடிக்கையை முன்னெடுப்
பேன் -என்றார். (எ-44)

## வாள்...

நேற்று மரணச் சடங்கு ஒன்று நடந்துள்
ளது. அதில் இரு தரப்புக்கிடையே தர்க்கம்
ஏற்பட்டுள்ளது. தர்க்கம் தீவிரமடைந்து
வாள்வெட்டில் முடிந்துள்ளது. வாள்வெட்
டுக்கு இலக்காகிக் காயமடைந்த இருவர்
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை
யில் சேர்க்கப்பட்டனர்.
இந்தச் சம்பவம் தொடர்பாக கோப்பாய்
பொலிஸாரால் இருவர் கைது செய்யப்பட்
டுள்ளனர். சம்பவம் தொடர்பான மேல
திக விசாரணைகளைக் கோப்பாய்
பொலிஸார் முன்னெடுத்து வருகின்ற
னர். (எ-20)

# பாக். கிரிக்கெட் அணியில் மூவருக்குக் கொரோனா!

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரர் சதாப் கான், வேகப்பந்து வீச்சாளர் ஹாரிஸ் ரௌப் மற்றும் இளம் வீரர் ஹைதர் அலி ஆகியோருக்குக் கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.
டெஸ்ட் மற்றும் ரி20 போட்டிகளில் விளையாடு வதற்காக பாகிஸ்தான் அணி பிரிட்டன் செல்லவுள்ளது. அதற்காக அவர்களுக்கு நேற்றுமுன்தினம் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.
அந்தச் சோதனைகளின் அடிப்படையில் அவர்களுக்குக்கொரோனாதொற்றிருப்பது கண்டறியப்பட்டது. அதையடுத்து அவர்கள் மூவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. (ஏ)

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்
தமிழ் இணையக் கல்விக்கழகத்தினூடாக தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணி (B.A) தமிழியல் (Tamilology) சிறப்புப் பட்டம்!
- க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி (பழைய பாடத்திட்டம் 4 பாடங்களில்)
- உயர்தரத்தில் எத்துறையில் பயின்றவர்களும் பட்டப் படிப்பைத் தொடர முடியும்.
- இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (University Grants Commission) அங்கீகரிக்கப்பட்டது.
- கல்வி ஆண்டில் 50 மாணவர்களே அனுமதிக்கப்படுவர்
2020 - 2023 ஆம் கல்வியாண்டுக்கான விரிவுரைகள் ஜூலை மாதம் 17 ஆம் திகதி ஆரம்பமாகும்.
பதிவுகளை மேற்கொள்ளும்
இறுதி திகதி 15.07.2020 வரை மட்டும்
வவுனியாவில்
தமிழ் இணையக் கல்விக்கழகம்
பாரதி இன்ஸ்ரிரியூட்
A9 வீதி, புளியங்குளம்.
071 315 6109
யாழ்ப்பாணத்தில்
தமிழ் இணையக் கல்விக்கழகம்
பாரதி இன்ஸ்ரிரியூட்
மீசாலை மேற்கு, மீசாலை, சாவகச்சேரி.
077 805 1173, 070 305 1173

வேலை ஆள் தேவை
யாழ் நகரில் வசிக்கும் சிறிய குடும்பத்தில் இரண்டு பிள்ளைகளை பராமரிப்பதற்கு முன் அனுபவமுள்ள தேக ஆரோக்கியம் உள்ள பெண் வேலை ஆள் தேவை.
தொடர்பு: 077 977 3753



# நிகழ்வில் துப்பாக்கிச் சூடு
## இருவர் சாவு: 7 பேர் காயம்

நியூயோர்க், ஜூன் 23
அமெரிக்காவின் வடகெரோலினா மாநிலத்தில் உள்ள நகரம் ஒன்றில் நேற்று அதிகாலை நடந்த துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்துள்ளனர். 7 பேர் காயமடைந்துள்ளனர்.
அங்கு நடைபெற்ற ஆபிரிக்க அமெரிக்கர்களின் நிகழ்வொன்றிலேயே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. வட கரோலினாவின் சார்லோட் நகரத்திலுள்ள பீட்டீஸ் போர்ட் வீதியிலேயேதுப்பாக்கிச்சூடுஇடம்பெற்றுள்ளது. ஆபிரிக்க அமெரிக்கர்களால் ஜூன்டீன்த் எனப்படும் நிகழ்வு கொண்டாடப்படுகின்றது. இந்த நிகழ்வு 1865 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19 ஆம் திகதி அமெரிக்காவின் டெக்சாஸின் கால்வெஸ்டனில் அடிமைப்படுத்தப்பட்ட ஆப்பிரிக்க அமெரிக்கர்களின் சுதந்திரத்தை நினைவு கூர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது. இம்முறையும் அமெரிக்கா முழுவதும் உள்ள நகரங்கள் மற்றும் நகரங்களில் உள்ளவர்கள் இந்த நிகழ்வை கொண்டாடுகிறார்கள். இவ்வாறான ஒரு நிகழ்விலேயே குறித்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக சார்லோட் மெக்லேன்பார்க் பொலிஸ் துணைத் தலைவர் ஜொனி ஜென்னிங்ஸ் தெரிவித்ததாவது;
சம்பவத்தில் இருவர் உயிரிழந்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. துப்பாக்கிச் சூடு முடிந்த பின்னர் மேலும் ஐந்து பேர் வாகனங்களில் மோதுண்டு காயமடைந்துள்ளனர் என்றார். (ஏ)

# மரண அறிவித்தல்



தோற்றம் 19 . 02 . 1950 — மறைவு 22 . 06 . 2020

## விக்கினேஸ்வரன் இராசநாயகி
## (தங்கச்சி அக்கா)

கொக்குவில் மேற்கு, மஞ்சவனப்பதி வீதியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட விக்கினேஸ்வரன் இராசநாயகி நேற்று (22.06.2020) திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் விக்கினேஸ்வரனின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற இரத்தினம் சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லத்துரை அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், இராசசேகரத்தின் (J.P) அன்பு சகோதரியும், தவமலர், காலஞ்சென்றவர்களான தங்கமலர், திலகவதி, விக்னேஸ்வரி, திருநாவுக்கரசு, இராணிமலர், சற்குணவதி மற்றும் நடேசலிங்கம், மகேந்திரவர்ணன் ஆகியோரின் மைத்துனியும், திருமதி நவரத்தினம் பத்மாதேவி, பாலசுந்தரம் இராசமலர் ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2020) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மஞ்சவனப்பதி வீதி,**
**கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



தோற்றம் 18 . 01 . 1955 — மறைவு 22 . 06 . 2020

## திருமதி தியாகேஸ்வரி சிவநாதன் (கலாரீச்சர்)
### (இளைப்பாறிய சங்கீத ஆசிரியை, யா/சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி)

நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கொண்ட திருமதி தியாகேஸ்வரி சிவநாதன் (கலா ரீச்சர்) நேற்று (22.06.2020) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற கனகசபை தங்கமுத்து தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற சிவசம்பு செல்லாச்சி தம்பதியரின் மருமகளும், சிவநாதனின் அன்பு மனைவியும், கோதையின் (HNB கைதடி) அன்புத் தாயாரும், நிர்மலனின் (செலான் வங்கி) அன்பு மாமியாரும், லரீனாவின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் கதிர்காமநாதன் (கனடா), கிருபானந்ததேவி (கனடா), மோகனராஜலிங்கம் (பதிவாளர் தென்மராட்சி), முருகவரோதயன் (லண்டன்), சிறீதரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற செந்தில்நாதன் மற்றும் லோகநாதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2020) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்பு:**
**077 308 6844**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.